
Registered sa aNewspaper in Ceylon ☆ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 124
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மேகை ஆனி 1 ரபி: அவ் 17 வெள்ளிக்கிழமை (14-6-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# நச்சுத்திராவக விற்பனையை கட்டுப்படுத்த பெர்மிட் முறை

## வடபகுதி பொலிஸ் அதிபர் ஆலோசனை

### 6 மாதத்தில் இங்கு 150 தற்கொலைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியில் நச்சுத்திராவகங்கள் பெர்மிட் மூலமே விற்பனை செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டென்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திடம் ஆலோசனை கோரியுள்ளார்.

இப்பகுதியில் அதிகரித்து வரும் தற்கொலைகளைத் தடுக்குமுகமாகவே பொலிஸ் சுப்பிரிண்டென்ட் இவ்வித ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கடந்த 6 மாதத்தில் வடபகுதியில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, தலைமன்னார், சாவகச்சேரி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, சுன்னாகம், ஆனைக்கோட்டை, கோப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் 150க்கு மேற்பட்ட தற்கொலை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதால் இவ்விதம் அதிகரித்துவரும் தற்கொலைகளைத் தடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுப்பதற்காகவே நச்சுத்திராவகங்கள் பெறுவதற்கு பெர்மிட்டுமுறை கொண்டுவரப்படவேண்டுமென சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் சுப்பிரிண்டென்ட் இதுசம்பந்தமாக நேற்றுச் சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள ஓர் அறிவித்தலில் ஒவ்வொரு பகுதியிலும் வீடுகளில் எந்த அளவு நச்சுத்திராவகங்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுக்கும்படியும் இந்த நச்சுத்திராவகங்கள் தேவையின்றி அல்லது தேவைக்கதிகமாக வைத்திருந்தால் அது பற்றியும் விபரம் சேகரிக்கும்படியும் கோரியுள்ளார்.

உரிய தேவையின்றி நச்சுத் திராவகம் வைத்திருக்கும் 18 வயதுக்குட்பட்ட வாலிபர்கள், மாணவர்கள் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் சமீப காலங்களில் நடந்த தற்கொலைகளில் அதிகமாக உயிரை மாய்த்துக் கொண்டவர்கள் வாலிபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ. நி)

## லொத்தர்சபை ஊழியர் இருவர் தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, வியாழன்

தேசிய லொத்தர்சபையைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மோசடிக் குற்றச்சாட்டின்மீது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரிசுக்குரிய டிக்கட்டுகளை வைத்திருந்த இருவர் தங்கள் டிக்கட்டுகளை சபைக் காரியாலயத்தில் கொண்டு போய்க்கொடுத்து பரிசுப் பணம் கோரியபோது அதற்குரிய பணம் எடுக்கப்பட்டிருந்ததாகவும் இதைத் தொடர்ந்து இரகசியப் பொலிசார் விசாரணை நடத்தியதாகவும் இந்த விசாரணையின் பின்னரே இவர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### பற்களைப்பேண ஹோப் டாக்டர் ஆலோசனை

கொம்பனித்தெரு, வியா.

கொழும்புத் துறைமுகத்தில் தங்கிநின்று இலங்கை மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்துவரும் அமெரிக்க 'ஹோப்' கப்பலிலுள்ள பல் வைத்திய நிபுணர் டாக்டர் எம். கவனேு வாயில் புற்றுநோய் ஏற்படுவதற்கு அதிகமாக வெற்றிலை பாவிப்பதும் ஒரு காரணமெனக்கூறியுள்ளார்.

பற்களை நல்ல முறையில் வைத்திருப்பதற்கு வெற்றிலையைக் குறைத்துக் கொள்வதே சிறந்த வழியென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### வீடமைப்புக்கு 1 1/2 கோடி ரூபா

கொழும்பு, வியாழன்

வீடு கட்டுபவர்களுக்கு என கடன் வழங்குவதற்கு வீடமைப்பு அமைச்சு ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனவும் மற்றும் அதிகாரிகள் சிலரும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்துப் பேசிய பின்னரே இத்தொகை ஒதுக்கப்பட்டது. இதற்கு முன்னர் வீடமைப்புக்கென இரண்டரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

### வேலைநிறுத்தம் திருமலை துறைமுக ஊழியர்

கொழும்பு, வியாழன்

திருக்கோணமலைத்துறைமுகத்தில் சென்ற மூன்று தினங்களாக வேலைகள் யாவும் ஸ்தம்பித்துள்ளன.

ஊழியர்கள் மேலதிக முற்பணம் கோரியதாகவும் இதற்கு நிர்வாகம் மறுத்துவிட்டதாகவும் இதுதான் வேலைநிறுத்தத்துக்குக் காரணமெனவும் தெரிகிறது.

இதர ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்யக்கூடுமென்றும் வேலைநிறுத்தம் பரவலாமென்றும் தெரிகிறது.

---

### எமில் அப்பீல் நிராகரிப்பு

லண்டன், ஜூன் 13

மோசடி குற்றச்சாட்டின் மீது சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த டாக்டர் எமில் சவுந்தரநாயகம் தமது தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல்செய்வதற்கு செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

தாம் மனித உரிமை நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்யப் போவதாக டாக்டர் எமில் தெரிவித்துள்ளார்.

## கல்பிட்டியில் பெரும் தீ விபத்து

புத்தளம், வியாழன்

ஒருபள்ளிவாசல், நான்கு கடைகள், மூன்று வீடுகள், இரண்டுவாடிகள் மூன்று மணிநேரத்தில், தீப்பிடித்து எரிந்து சாம்பராயின. இது கற்பிட்டியில் நடைபெற்றது. இத்தனைக்கும் காரணம் 45 கலன் பெற்ரோலும் ஒரு தீக்குச்சியுமாம். 3 மணித்தியாலம் நடைபெற்ற கடும் போராட்டம் காரணமாக தீ அணைக்கப்பட்டது. கற்பிட்டிப்பகுதிப் பொலிஸ் அதிகாரி திரு. ஜே. எஸ். குணரத்தினத்தின் பெருமுயற்சியினுல் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

கற்பிட்டியைச் சேர்ந்த வர்களான காதர், சலமன் ஆகிய இருவருக்குமிடையே ஏற்பட்ட ஒரு சந்தேகமே இத்தனை பெரிய விபத்துக்குக் காரணமென விசாரணையின்பின் தெரியவந்தது.

ஒருபீப்பா நிறைய பெட்ரோல் ஒடைக்கப்பட்டிருந்ததாகவும். ஆனுல் காதருக்கும் சலமனுக்கும் பீப்பாவிலிருப்பது மண்ணெண்ணையாயிருக்குமோ எனச் சந்தேகம் எழுந்ததாகவும். நெருப்பின்மூலம் சந்தேகத்தைஇலகுவில் தீர்த்துக்கொள்ளலாமென சலமன் சொல்லவே காதரும் சம்மதித்து பீப்பாமூடியைத் திறந்து பெட்ரோலை ஓடவிட்டு அதில் தீக்குச்சியைத்தட்டி வைத்ததாகவும் தெரியவந்தது.

சலமனும் காதிரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## திடீர்ப் பரிசோதனை நடத்த வருமானவரி இலாகாமுடிவு

கொம்பனித்தெரு, வியாழன்

வருமானவரி காட்டாது பலர் இன்னமும் அரசாங்கத்தை ஏமாற்றிவருவதாக அறியப்படுகிறது.

இவ்விதம் ஏமாற்றி வருபவர்களில் அதிகமானோர் கொழும்பு நகரிலுள்ள மொத்த விற்பனை வர்த்தகர்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தகர்கள் தாம் சில்லறை வியாபாரிகளிடம் பொருள்களை விற்பனை செய்யும்போது அதற்குரிய பற்றுச்சீட்டு கொடுக்காது வருவதாகவும் இதன்மூலம் வருமானவரிக்கந்தோரை ஏமாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. வருமானவரிக் கந்தோருக்கு இவ்வித தகவல்கள் கிடைத்துள்ளதால் இவ்வித வர்த்தக ஸ்தாபனங்களின் மீது திடீர்ப் பரிசோதனை நடத்த வருமானவரிஇலாகாவினர் திட்டமிட்டுள்ளனர்.

## லஞ்ச ஊழலைஒழிக்க கண்காணிப்புச் சபை

### அமைச்சரிடம் தூதுகோஷ்டி கோரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

"கள் இறக்கும் தொழிலாளர்களை ஒருபுறம் பொலிசாரும் மறுபுறம் மதுவரி இலாகா உத்தியோகத்தர்களும் துன்புறுத்துகிறார்கள். இதற்கு தற்போதுள்ள மரவரிமுறையிலுள்ள சில பிரமாணங்களே ஏதுவாக இருக்கின்றன. இம்மாதிரியான சட்டங்களை திருத்தவோ அல்லது தளர்த்தவோ நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தூது கோஷ்டியொன்று நாளை சனிக்கிழமை உள்நாட்டமைச்சரைச் சந்தித்துக்கேட்கவிருக்கிறது.

திரு. கே. ஐ. பூவிலிங்கம் தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் 35வது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி உள்நாட்டு அமைச்சரைச் சந்திக்கவிருக்கும் இத்தூதுக் கோஷ்டியில் சங்கப்பொதுக் காரியதரிசி திரு. எம். வி.

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பிராமணவகுப்பு, அல்லது செட்டியார் வகுப்பைச் சேர்ந்த அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. கல்வியறிவு, வயது, தராதரம் ஆகிய விபரங்களோடு மனுப்பத்திரத்தை 20-6-68க்கு முன், நிர்வாகி, காண்டீபன் ஸ்ரோர்ஸ், மாவிட்டபுரம் என்ற விலாசத்திற்கு அனுப்புக. 1368

கொழும்பில் எமது தலைமைக் காரியாலயத்திற்கு உதவி மனேச்சர் தேவை. ஆங்கில அறிவும், வியாபார அனுபவமும், பிணைப்பணம் ரூ. 2,000/- கட்டக்கூடியவர் மட்டும் நேரில் வரவும். சம்பளம் ரூ 250/- அன்ரன் பிரதர்ஸ் அன்ட் கம்பனி, மொம்சாக் கட்டிடம், [மேல் மாடி], ஸ்ரான்லி ரோட்டு, யாழ்ப்பாணம். 1559

விவசாய ரசாயனப் பொருள்கள், பெயின்டுகள், நூல்கள், பொத்தான்கள், இறுவர் உடைகள், கோப்பி, மப்படம், நல்லெண்ணை ஓடர்கள் பதிவுசெய்ய வடமாகாணத்தின் எல்லா நகரங்களிலும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. சம்பளமும், கமிஷனும் உண்டு. அன்ரன் பிரதர்ஸ் அன்ட் கம்பனி, மொம்சாக் கட்டிடம் [மேல் மாடி], ஸ்ரான்லி ரோட்டு, யாழ்ப்பாணம். 1560

மப்படம், கோப்பி மற்றும் இனிப்பு வகைகள் உற்பத்திசெய்து அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். அன்ரன் பிரதர்ஸ் அன்ட் கம்பனி, மொம்சாக் கட்டிடம் [மேல் மாடி], ஸ்ரான்லி ரோட்டு, யாழ்ப்பாணம். 1561

### கல்வி

வகுப்புகள்:

1969-ம் ஆண்டுக்கான, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்க பிரவேச, பாலபண்டிதவகுப்புக்கள் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் விடுமுறை நாட்களில் தொடர்ந்து நடைபெறும். சேரவிரும்புவோர் 16-6-68 ஞாயிறு காலை வகுப்புக்கு வருக. விபரங்களுக்கு பண்டிதர் அ. ஆறுமுகம், பண்ணாகம் சுழிபுரம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 1367

G.C.E. (O/L) வகுப்புகள்:

கலை, விஞ்ஞானம், தமிழ, ஆங்கில மொழிகளில் காலையும் மாலையும் நடத்தப்படுகின்றன. Physics, Applied, Pure maths அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும். யாழ். போதனாநிலையம், 15/1, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 1364

2வது வாரம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சி

ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா நடிக்கும்

மூகூர்த்தநாள்

2வது வாரம்!

வின்சர்

ஜெமினி - சாவித்திரி

K.R. விஜயா - முத்துராமன்

நடித்த

சீதா

லிங்ஸ்லி பிளாசா மைலன்


வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] ராஜ் [நீர்கொழும்பு]

ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [அட்டன்] அயன் [மன்னார்]

★ ஜெமினி கணேசன்

★ கே. ஆர். விஜயா

நடித்த



ஏ. வி. எம். புரொடக்‌ஷன்ஸ் ராமு

ரூபா 5, 10

## முத்திரைகளுக்கு நீண்ட கியூ

யாழ்ப்பாணப் பகுதியில் பல தபால் கந்தோர்களில் 5, 10 ரூபாய் முத்திரைகளுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவுகின்றது. அண்மையில் நடக்க இருக்கும் அரசாங்க பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க என்று பல நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகள் இம்முத்திரைகளைப்பெற்றுக்கொண்டு விட்டதாலேயே முத்திரைகளுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம்.

இம்மாதம்16 ம்திகதிபெரும்பாலன விண்ணப்பங்களுக்குஇறுதித்தேதியாக இருப்பதால்கடைசிநிமிஷநேரத்தில் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை அனுப்புவதில் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை அனுப்புவதில் ஆர்வம் காட்ட முன்வந்துள்ளனர்.

இன்று காலை யாழ்ப்பாணம் பெரியதபால் கந்தோர் காரியாலயத்தில் முத்திரைக்காக நீண்ட ஒரு 'கியூ' காணப்பட்டது. முத்திரைகள் அங்கு முடிவடைந்து விட்டமையால் பல பரீட்சார்த்திகள் மிகுந்த ஏமாற்றத்துடன் வேறு தபால் நிலயங்களுக்கு விரைந்தனர்.

## விளையாட்டுக் கழக உறுப்பினர்

புத்தளம், வியா.

புத்தளம் சன்பேட் விளையாட்டுக்கழகத்தின் நடப்புவருடஉத்தியோகஸ்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

விசேஷ போஷகர்: திரு. கே. கோபாலரத்தினம் [வட்டரே அதிகாரி] உபபோஷகர்கள்: ஜனாப்கள் ஏ. எம். ஏ. சாகிட், ஏ. பி. ஏ. வகாப், ஏ. ஹமீது எம். ஐ. இபுருகிம் எம். ஏ. கபூர். தலைவர்: ஜனாப் எஸ். எல். அபூஹனிபா, உபதலைவர்: ஜனாப் ஏ. எம். நுகுமன் காரியதரிசி ஜனாப் என். என். அனவர் உபகாரியதரிசி: ஜனாப் என். எம். ஹாலிக் பொக்கிஷ அதிகாரி; ஜனாப் ஏ. எம். முபாரக் கணக்குப் பரிசோதகர்: ஏ. எம். எம். நிசார் விளையாட்டுக் கழகத்தலைவர் ஜனாப் ஏ. ஜீ. எம். ஜவாத்.

## நவக்கிரகப் பிரதிஷ்டை

கோப்பாய், வியாழன்

கோப்பாய் வெள்ளெருவை விநாயகராலயத்தில் வரும் 16-ம் திகதி பகல் நவக்கிரக பிரதிஷ்டையும் மஹாகும்பாபிஷேகமும் நடைபெறவிருக்கிறது.

ராணி

(யாழ்ப்பாணம்)

ஜெய்சங்கர், பாரதி, சோ நடித்த

நான் யார் தெரியுமா?

MANOHARA
JAFFNA

Daily 4-45, 7-00, 9-45 p.m

Sandy Dennis
in
up the
DOWN STAIRCASE

REGAL JAFFNA

Daily at
4-45, 7-00 & 9-45 P. M.

Sophia Loren
George Peppard
in
OPERATION CROSSBOW

## செய்திச் சுருக்கம்

### இந்தியாசெல்லும் கோஷ்டி

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்புபவர்கள் அனுபவிக்கும் பிரயாண கெடுபிடிகளையும் கஷ்டங்களையும் சுங்க இலாகாக்களின் தொல்லைகளையும் நேரில் அறிந்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென மூவர் கோஷ்டியொன்று இந்தியா செல்லவிருக்கிறது.

### கார்-பஸ் விபத்து

மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த கொழும்பு தங்காலை கடுகதி பஸ் வண்டியொன்று காலி கட்டுஸ்கொலட என்னுமிடத்தில் இரண்டு கார்களுடன் மோதுண்டதைத் தொடர்ந்து இரு கார்களும் தூக்கி எறியப்பட்டன, மேற்படி பஸ் கட்டுப்பாட்டை மீறி பாதையோரத்தில் இருந்த தேனீர்கடை ஒன்றுடன் மோதியதால் கடை சுக்குநூறாகியது. தேநீர் கடையிலிருந்த 10 வயதுச் சிறுவன் தூக்கி எறியப்பட்டான். காரிலிருந்த ஒருவர் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### சமாதானம் நிலவும்

இஸ்லாமிய சகோதரத்துவம் உலகில் பரவவேண்டும். அப்போதுதான் உலகில் நிரந்தர சமாதானம் நிலவும் போரும் கெடுபிடி யுத்தங்களும் மறையும் என்று மன்னார் பட்டின சபைத் தலைவர் ஜனாப் எம். எஸ். ஏ. றகீம் மன்னார் மீலாத் விழாக் கூட்டத்தில் கூறினார். மன்னார் பெரிய கடை வீதியில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு ஜனாப் றகீம் தலைமை வகித்தார்.

### கூட்டுப் பிரார்த்தனை

புசல்லாவை ஸ்ரீ கதிரேசன் கோவில் வெள்ளிக்கிழமை கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. புசல்லாவை இந்துமகா சங்கம் இதனை நடத்தி வருகின்றது புசல்லாவை பட்டின மக்கள் மட்டுமன்றி சவுகபிட்டிய ரெம்டபாவத ஆகிய பட்டினங்களில் இருந்தும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பார்சலில் வந்த பாம்பு

கல்பொடையென்ற குக் கிராமத்திலுள்ள ஒருவருக்கு பிறந்தநாள் பரிசாகப் பெரிய பார்சல் ஒன்று வந்து சேர்ந்தது. கணவனும் இளம் மனைவியுமாக பார்சலைப்பிரித்துப் பார்த்தபோது அதற்குள் 5 அடி நீளமான மலைப்பாம்பொன்று சுருண்டு கிடந்ததாம். பாம்புக்கு உணவாக முட்டைகளும் அதற்குள் வைக்கப்பட்டிருந்ததாம். மேற்படிபார்சல் தியகஹ தபாற்கந்தோரிலிருந்து அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

### மின்சாரம் தாக்கி மரணம்

பாலத்துறையைச்சேர்ந்த 22 வயதான ஆர். ஏ. சோமபால என்ற வாலிபர் மின்சாரத்திற்கு பலியானார். இறந்தவர் ஒரு மின்சார வேலைசெய்பவரென்றும். சம்பவம் நடந்தினம், மின்சார அலங்காரம் செய்த போது மின்சாரத்தினால் தாக்குண்டதாக விசாரணையில் கூறப்பட்டது. விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### வெளிநாட்டு ஏற்றுமதி

அன்னாசி, மா, பப்பாளி, வில்லம்பழம் போன்ற இலங்கையில் உற்பத்தியாகும் பழவகைகளில் இருந்து ஒருவகை பழரசம் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

### தாதி-மருத்துவதாதிமார் தேவை

மட்டக்களப்பிலுள்ள ஒரு வைத்திய நிலையத்துக்கு 1968-ம் வருடம் ஆவணி 1-ம் திகதி முதல் பதிவு செய்யப்பட்ட பிரசவ மருத்துவப் பயிற்சிபெற்ற தாதியும் பதிவுசெய்யப்பட்ட தாதிப் பயிற்சிபெற்ற மருத்துவதாதிலம் தேவை.

விண்ணப்பதாரர்கள் போதிய அனுபவம் பெற்றிருக்கவேண்டும். உற்சாகத்துடனும் திறமையுடனும் பிரசவவைத்தியவேலைகளைத் தனித்துக் கையாளக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

வேதனம்

தாதிக்கு; எல்லாம் உட்பட மாத வேதனம் ரூ 325. மருத்துவதாதிக்கு எல்லாம் உட்பட மாத வேதனம் ரூ. 225.

விடுதி, சமையல் வசதியுடன் வழங்கப்படும் 1968-ம் வருடம் ஜூன் 20-ம் திகதிக்குமுன் பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

டாக்டர் ஆர். கே. செல்லையா
வைத்திய நிலயம்,
40, திருக்கோணமலை வீதி
மட்டக்களப்பு.

833

### வேலை விளம்பரம்

பல்லவராயன்கட்டுக் கிராமசபையின் பரிபாலனத்தில் உள்ள வன்னேரிக்குளம் 11-ம்கட்டைப்பாதை ரோட்டமைப்பு வேலைக்கு இரண்டாம் முறையாக ஒப்பந்தம் அழைக்கப்படுகிறது. உள்ளூராட்சிப் பகுதிகளிலோ, மற்றும் பகிரங்க வேலைப் பகுதிகளிலோ ஒப்பந்தகாரராகப் பதிவுபெற்றவர்கள் ஒப்பந்தம் கேட்கும் உரிமையுடையர். இவ்வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 20-6-68 திகதி பிற்பகல் 1 மணிவரைக்கும் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 22-6-68 திகதி முற்பகல் 11 மணிக்குப்பிந்தாமல் கி. ச அலுவலகத்தில் அக்கிராசனரிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரருக்கு மட்டுமே ஒப்பந்தமுடிபு அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் விலை ரூபா 10-00

கேள்விப்பிணைப்பணம் ரூபா 25-00.

சி. முகம்மது அப்துல்காதிர்,
(ஒப்பம்)
அக்கிராசனர்,
பல்லவராயன்கட்டுக்
கிராமசபை வேரவில்
832

### பொன்னாடை

கோப்பாய், வியாழன்

தமிழ்மணி திரு வி. எஸ். கணேசசுந்தரத்தின் சேவையைப்பாராட்டி கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கினார்.

இவ்வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்ற ஞானசம்பந்தர் விழாவிலே இடம்பெற்றது.

கைத்தறி நெசவாளர்களுக்கு

ஓர் அறிவித்தல்

உங்களின் கைத்தறிகளில் தயார்செய்யும்ஜவுளிகளை நியாயமான விலைகளில் எம்மிடம் விற்பனை செய்யலாம்.

S. R. S.

ஜவுளி மாளிகை

216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன் : 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. நா. சபையில்

# அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தம் நிறைவேறியது

## 'அணு சகாப்தம் ஆரம்பித்தபின் மிக முக்கியமான சர்வதேச உடன்படிக்கை'

### ஐ. நா. பிரதிநிதிகளிடையே ஜோன்ஸன் உரை

நியூயோர்க், ஜூன் 13

ரஷ்யாவும், அமெரிக்காவும் இணைந்து தயாரித்த அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தம், நேற்று ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேறியது. 95 நாடுகள், நகல் ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. நான்கு நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. மற்றும் 21 நாடுகள், வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அணு ஆயுத பரவல்தடை நகல் ஒப்பந்தம் சபையில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, தனது 22வது கூட்டத்தொடரைச் சபை ஒத்திப்போட்டது.

**பிரான்ஸ் எதிர்ப்பு**

நகல் ஒப்பந்தத்தின் மீது வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன் சபையில் பேசிய பிரெஞ்சுப் பிரதிநிதி, தமது நாடு, அந்த ஒப்பந்தத்தின் மீது கைச்சாத்திடாது என்று கூறினார். அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகளுக்குப் பிரான்ஸ் அணுஆயுதங்களை விநியோகிப்பது இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

**ஜோன்ஸன் உரை**

வாக்கெடுப்பு முடிவடைந்தபின்னர், எதிர்பாராதவிதமாக சபையில் தோன்றிப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க, விரைவில் ஐ. நா பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டுமென வலியுறுத்தினார்.

அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தத்தை, ''அணு சகாப்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து ஏற்பட்டுள்ள மிக முக்கியமான சர்வதேச உடன்படிக்கை'' என ஜோன்ஸன் வர்ணித்தார்.

நகல் ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளை அமெரிக்கா சரிவர ஆற்ற முயலும் என்று அவர் உறுதியளித்தார். உலகில் அணு ஆயுதப் போட்டியை நிறுத்துவதற்கு, ஒப்பந்தத்தைத் தயாரித்த இரு நாடுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

**'அருமையான சந்தர்ப்பம்'**

''உலகம் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு இந்த ஒப்பந்தம் ஓர் அருமையான சந்தர்ப்பத்தை அளிக்கிறதென நான் நம்புகிறேன்'' என்று ஜோன்ஸன் குறிப்பிட்டார்.



## பெய்யெனப் பெய்த மழை!

அல்மா அட்டா, ஜூன் 13

பெய்யென்றதும் மழை பெய்தது. இதைச் சாதித்தவர்கள் விஞ்ஞானிகள். வட கஸக்ஸ்தானில் விஞ்ஞானிகள் செயற்கையாக மழை பெய்யச் செய்தார்கள். செயற்கை மழையை ஏற்படுத்த, முகிற் கூட்டங்களில் விமானங்கள் மூலம் ரசாயனங்கள் தெளிக்கப்பட்டன.

இந்தப் பரீட்சார்த்தங்களின்போது, ஐந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் நான்கில் விஞ்ஞானிகள் வெற்றிகண்டனர்.

ரஷ்ய செய்தி தாபனமான 'டாஸ்', இத் தகவலை வெளியிட்டது.

## பிரான்ஸில் ஆர்ப்பாட்டங்கள்

பாரிஸ், ஜூன் 13

பிரான்ஸில், தெரு ஆர்ப்பாட்டங்கள்மீது அரசாங்கம் விதித்துள்ள புதியதடைகளைத் தொழிலாளர்களும், மாணவர்களும் அத்துமீறியுள்ளனர்.

பல நகரங்களிலும், மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளனர்.

ஸோபோன் பல்கலைக்கழகத்துக்கு வெளியே மாணவர்களும் பொலிசாரும் மோதினர். கடைசியில், மாணவர்கள்மீது பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்செய்து, அவர்களைப் பல்கலைக்கழகக் கட்டடத்துக்குள் துரத்திவிட்டனர்.

## நைஜீரியாவுக்கு சர்வதேசப்படை

லண்டன், ஜூன். 13

நைஜீரியாவில் சர்வதேசப் படை ஒன்றை நிறுவவேண்டுமென்ற ஆலோசனையொன்று நேற்று பிரிட்டிஷ் பாரிமெண்டில் தெரிவிக்கப்பட்டது.

லிபரல் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் தெரிவித்த இந்த ஆலோசனைக்கு பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு ஸ்டூவார்ட் பதிலளிக்கையில் நைஜீரியாவில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் கேட்காது இத்தகைய சர்வதேச படையை நிறுவ [illegible] தரப்பினரும் சம்மதித்தால் அதைச் செய்யலாம் என்றார் அவர்.

பாரிஸ் பேச்சுக்கள்

# 'வியட்னும் போரைவிஸ்தரிக்க வடவியட்னும் முயலுகிறது'

### அமெரிக்க குற்றச்சாட்டு

பாரிஸ், ஜூன் 13

வடவியட்னும், நாளாந்தம் தென்வியட்னும்மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்துவதன்மூலம், வியட்னும் போரை விஸ்தரிக்க முயல்வதாக அமெரிக்கா வடவியட்னும்மீது நேற்று இங்கு குற்றஞ்சாட்டியது.

நேற்று, வடவியட்னும் பிரதிநிதிகளும், அமெரிக்கப் பிரதிநிதிகளும் இங்கு சந்தித்து, நான்குமணி நேரமாக, வியட்னும் சமாதானப் பூர்வாங்க ஆலோசனைகளை நடத்தினர்.

**ஹரிமன் கேள்வி**

அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. அவரெல் ஹரிமன் பேசுகையில், வடவியட்னும் இவ்விதம் தினசரி ரொக்கெட் தாக்குதல்களை நடத்திவரும் சந்தர்ப்பத்தில், வியட்னும் போர் நடவடிக்கைகளைக் குறைக்குமாறு அது அமெரிக்காவை எப்படி வலியுறுத்த முடியுமெனக் கேட்டார்.

**தியூ பதில்**

வடவியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டித்தலைவர் திரு. ஸுவான் தியூ பதிலளிக்கையில், வடவியட்னும்மீது குண்டுவீச்சை நிறுத்துவதற்கான பொருத்தமான நேரத்தையும், சமயாசந்தர்ப்பத்தையும் வெளியிடுமாறு அமெரிக்காவிடம் சவால் விடுத்தார்.

**அடுத்தவாரம் சந்திப்பர்**

இருதரப்பினருக்குமிடையே, ஒருவாரம் கழித்து, மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.

# 'சைவத்துக்கு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது'

### கோப்பாய் எம். பி. கூறுகிறார்

கோப்பாய், வியாழன்

''நமது சமயமானது அருகிவருகின்ற நிலையிலிருந்த காலத்தில் ஞானசம்பந்தர் போன்ற சமயப்பெரியார்கள் தோன்றிச் சைவத்தை நிலைபெறச் செய்தனர் அவர்கள் காட்டிய வழியிலே நாம் தொண்டாற்றினால்தான் சைவசமயம் புத்துயிர் பெறமுடியும்.''

மேற்கண்டவாறு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நடாத்தப்பட்ட ஞானசம்பந்தர் விழாவில் பேசுகையில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

திரு. பொ. தி. ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. கதிரவேற்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தற்காலத்திலே மதமாற்றம் என்ற பெயரிலே சைவசமயத்திற்கு நெருக்கடியான சூழ்நிலையொன்று உருவாகி வருகிறது. அதற்குக் காரணம் சைவத்தின் அடிப்படைக் கருத்துக்களை நாம் உணர்ந்து செயல்படாததேயாகும். எனவே நமது சமயத்தின் தூய்மை பண்பாடு, இலட்சியம் முதலியவற்றை உணர்ந்து அன்புடைமை, அறிவுடைமை ஆகியவற்றின் மூலமாக சைவத்தை வளர்ச்சிபெறச் செய்வது சைவமக்களாகிய நமது கடமையாகும்.''

இவ் விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திரு. கதிரவேலுப்பிள்ளை பரிசுகளை வழங்கினார்.

தமிழ்மணி திரு. வி. எஸ். கணேசசுந்தரத்தின் திருமுறைக் கச்சேரியும், பிரம்மஸ்ரீ வ. குகசர்மா, திருவாளர்கள் மு. பூபாலசிங்கம், ஆ. துரைராசசிங்கம் ஆகியோரது கருத்துரைகளும் விழாவில் இடம் பெற்றன.

## ரத்துடன் ஜீப் மோதியது

### சாரதி படுகாயம்

புத்தளம், வியா.

கடற்பிட்டி கடற்படைக்குச் சொந்தமானபுதிய 'ஜீப்' வண்டியொன்று மரத்தில் மோதிப் பலத்த சேதங்களுக்குள்ளாகியது. இதன் சாரதி கடுமையான காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டார்.

யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமற்போகவே வண்டி மரத்தில் மோதவேண்டியேற்பட்டதென விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி

## எக்ஸ்றே இயந்திரம் பழுது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள இரு எக்ஸ்றே இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்துள்ளதால் எக்ஸ்றே எடுக்கவரும் நோயாளர்களில் மூன்றிலொரு பகுதியினருக்கே தினமும் எக்ஸ்றே எடுக்கக் கூடியதாகவிருப்பதாகத் தெரிகிறது.

இதனால் நோயாளர் சிகிச்சைபெறுவதில் வீண்தாமதம் ஏற்பட்டுவருகிறது. [கா. நி]

## சமய அறிவு போட்டியில் பரிசு பெற்றோர்

கோப்பாய், வியாழன்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

ஆ. நற்குணானந்தன், க. விஷ்ணுமோகன், சி. செ. தர்மராஜா, து மகேசரத்தினம், தி புனிதவதி, பா. கஜேந்திரன், சு. சந்திரகுமாரி, து. செல்வமனோகரி, இ. தேவமனோகரி, க. வரதராஜன்.

வெற்றிபெற்றோருக்கு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பரிசுகளை வழங்கினார்.

# அமெரிக்க விமானம் கல்கத்தாவில் நொறுங்கியது

### 3 சடலங்கள் மீட்பு; மூவரைக் காணவில்லை

கல்கத்தா, ஜூன் 13

பாங்கொக்கிலிருந்து புறப்பட்ட பான் அமெரிக்கன் 'போயிங்' விமானமொன்று கல்கத்தா டம்டம் விமான நிலையத்தில், கடும் மழையினுள் இறங்க முயற்சிக்கையில், இன்று அதிகாலை விழுந்து நொறுங்கியது.

இவ்விமானத்திலிருந்த 63 பிரயாணிகளில், 57 பேர் காப்பாற்றப்பட்டிருப்பதாகக் கடைசிச்செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் இருவரின் நிலை, கவலைக்கிடமாகவுள்ளது.

விமானத்தின் இடிபாடுகளுக்கிடையே, எரிந்துபோன மூன்று சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மற்றும் மூவரைக் காணவில்லை.

விமானம், துண்டுதுண்டாகிவிட்டது. மீட்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## 23 பேர் கொல்லப்பட்டனர்

### 200 கடைகள் சேதம்

நாகபுரி, ஜூன். 13

நாகபுரியில் இரு சமூகத்தவருக்கிடையில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து ஏற்பட் நிலைமையைச் சமாளிக்கப் பொலிசார் சுட்டதில் 23பேர் கொல்லப்பட்டனர்.

திகிரவாதிகள் வீதியில் கைகலப்பு நடத்தியபோது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தில் 19 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இக்கலவரத்தின்போது 200 கடைகள் சேதமடைந்துள்ளன. 25 பேர் கைது செய்யப்பட்டனர்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

வாஷிங்டன், ஜூன்-13

றொபர்ட் கென்டி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசார வேலைகளை நேற்று நெல்சன் றொக்பெல்லர் மீண்டும் ஆரம்பித்தார்.

## அளவெட்டி அதிர்ஷ்டப்பரிசு

அளவெட்டி, வியாழன்

அளவெட்டி கிராமமுன்னேற்றச் சங்கத்தினரால் நண்பர்களுக்கிடையில் நடாத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெற்ற இலக்கங்கள் முறையே வருமாறு:-

507, 170, 164, 307, 1262, 1389, 1258, 199, 1419, 1150.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

சுயராஜ்யத்தினுல் நாம் நாகரிகம் அடையுயவும், நாம் தூய்மையுற்ற நம் நாகரீகத்தை நிலைக்கச் செய்யவும் முடியாதென்றுல் அந்த சுயராஜ்யம் சல்லிக்காசு பெருது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

சாதிவோரண கிலகவருஷம் ஆனி மாதம் 1-ந்திகதி
(14-6-68)

## தேசிய ஐக்கியம்

இந்நாட்டின் இரு பெரும் சமூகங்களான சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் ஒற்றுமை நிலவ வேண்டும். இந்நாட்டுமக்கள் அனைவரும் இன, மத, சாதி பேதமின்றி ஒரு தாய் மக்கள் போல் வாழ வேண்டும். தேசிய ஐக்கியமும் நாட்டின் முன்னேற்றமும்தான் வேறு எதையும்விட இன்றைய அவசியத் தேவை. சட்ட விரோதக் குடியேற்றம், கள்ளக் கடத்தல் ஆகியவைகள் தடுக்கப்பட வேண்டும். இதுவே இந்நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்பும் மக்களின் உண்மையான விருப்பம். நமது விருப்பமும் இதுவே. இதற்காகவே நாம் உழைத்து வருகிறோம். அன்பும் பண்புமுள்ள ஒரு நல்ல சமுதாயம் உருவாக வேண்டுவதே நமது ஆவல்

மாவட்டசபை பற்றிய வெள்ளையறிக்கை மீதான விவாதம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவாதத்தில் பிரதிநிதிகள் சிலர்கலந்து கொண்டு மாவட்டசபைகள்பற்றிய தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். தேசிய ஐக்கியம்தான் தமது நோக்கம் என்று கூறி அதற்கான முயற்சிகளில் ஓரளவு வெற்றியுமீட்டியுள்ள பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா 'மாவட்டசபைகள் அமைப்பதன் மூலம்' தேசிய ஐக்கியம் மேலும் வலுப்பெறும் என்று கூறியிருக்கிறூர். தேசிய அரசாங்கம், அமைப்பதற்கு உத்தேசித்துள்ள மாவட்டசபைகள் தேசிய ஐக்கியத்தைக் குலைத்துவிடுமென்றும் நாட்டைப் பிளவுபடுத்திவிடுமென்றும் பிரசாரம் செய்து வரும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் இந்த விவாதத்தைப் பகிஷ்கரித்து வருவதால் அவர்களுடைய கருத்து மக்கள் பிரதிநிதிகள்சபையில் ஒலிக்கவில்லை. தமிழரசுக்கட்சியிலிருந்து [ஆட்பதிவு மசோதாவை எதிர்த்ததன் மூலம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக] வெளியேற்றப்பட்ட ஊர்காவற்றுறைப் பிரதிநிதி மாவட்டசபைகளால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்படுவார்களெனத் தெரிவித்திருக்கிறூர். ஊவாபரணகமை எம். பி. திருமதி குசுமா ராஜரத்தினு, தம்தெனியாப் பிரதிநிதி திரு. ஆர். ஜி. சேனநாயகா ஆகியோர் சமஷ்டிக் கட்சியினரின் நோக்கம் நாட்டைப் பிரித்து 'தமிழ் அரசு' ஒன்றை அமைப்பதேயெனவும் தேசிய ஐக்கியத்தைக் குலைத்து நாட்டைப் பிளவுபடுத்த ஒரு போதும் அனுமதிக்க முடியாதென்றும் கூறியிருக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் சபைக்குள்ளும் சரி வெளியேயும் சரி மாவட்டசபைகளை எதிர்ப்பவர்கள் தேசிய ஐக்கியம் குலைந்துவிடுமென்றும் நாடு பிளவுபட்டுவிடுமென்றுமே கூறுகின்றனர். மாவட்டசபை வேண்டுமென வற்புறுத்திவரும் தமிழரசுக் கட்சியினரின் கொள்கை இந்நாட்டின் ஒற்றை ஆட்சி அமைப்பை மாற்றி பல இனங்கள் ஒற்றுமையாக வாழ பல நாடுகளிலும் பின்பற்றப்படும் சமஷ்டி ஆட்சி அமைப்பை உருவாக்குவதுதான். இதை தமிழரசுக் கட்சியினர் முன்னரே தெளிவுபடுத்தியிருக்கின்றனர். நாட்டைப் பிரிப்பது தங்கள் நோக்கம் என்று அவர்கள் கூறவில்லை.

ஆளும் கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடு இருப்பினும் பிரதமர் வெளியிட்டுள்ள வெள்ளையறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்டசபை நகல் மசோதாவின்படி, மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் யாருக்கு நன்மை, யாருக்கு தீமை, நாட்டுக்கு நன்மையா, தீமையா என்பது ஒருபுறமிருக்கட்டும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இலங்கையில் வாழும் சமூகங்களுக்கிடையில் எந்த அளவுக்கு நல்லுறவு வளர்ந்திருக்கிறது. தேசிய ஐக்கியம் எவ்வளவு வலுப்பெற்றிருக்கிறது. நாடு எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்கிறது? இவைபற்றி, தேசிய ஐக்கியம்பற்றியும் நாட்டின் ஒருமைப்பாடுபற்றியும் கவலை கொள்வோர் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். ஒரே மொழி, ஒரே இனம், ஒரே நாடு என்ற முறையில் பலஇன, பலமொழி பேசும் மக்கள் வாழும் ஒருநாட்டில் 'தேசிய ஐக்கியத்தை' நிலைநாட்டுவது சுலபமல்ல. சீர்குலைந்து போன தேசிய ஐக்கியத்தை மீண்டும் நிலைநாட்டியபின்னர்தான் தேசிய ஐக்கியத்தைப் பாதுகாப்பது பற்றி பேசவேண்டும் இந்நாட்டில்வாழும் தமிழ் பேசும் மக்களைச்சந்தேகப்பிரஜைகளாகக் கருதிக்கொண்டு அவர்களைச் சந்தேகப் பிரஜைகளாகவும் சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் நடத்திக்கொண்டு தேசிய ஐக்கியம்பற்றிப் பேசுவது வேடிக்கையானது. இந்நாட்டு மக்கள் இந்நாட்டுக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தை அனுபவிக்கவும் சுதந்திரமாக, சமஉரிமையுடனும் சமசந்தர்ப்பத்துடனும் வாழவும் பெரும்பான்மைச் சமூகத்தினர் வழிவகுக்காதவரை தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதென்பது வேசிளவில்தானிருக்க முடியும்.

### திறந்தவெளி அரங்கு திறப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

முன்னைநாள் யாழ் நகர மேயர் திரு. பி. காசிப்பிள்ளையின் நினைவாக அரியாலை ஜனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளியரங்கை ஒய்வுபெற்ற யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா இம்மாதம் 16-ம் திகதி மாலை திறந்து வைப்பார். இவ்வைபவத்திற்கு திரு அ. விஸ்வநாதன் தலைமை வகிப்பார்.

# மாவட்டசபைகளும் அரசியல்கட்சிகளும்

அரசியல் கட்சிகள் ஒவ்வொரு தேர்தலின்போதும் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஜனங்களிடையே வகுப்புவாத உணர்ச்சியை கிளப்பி விடுவது சுதந்திரமடைந்த பின் நமது அரசியல் வாழ்க்கையில் காணப்படும் ஒரு கவலை தரும் விஷயம். மாவட்டசபை மசோதாவும் இதற்கு விலக்கல்ல. அதை எதிர்ப்பவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கம் அற்றுப்போய் விடுமென்று கவலைப்படுகிறூர்கள் போலத்தெரிகிறது. ஒரு சில விஷயங்களிலாவது அவ்வாதிக்கத்தை எதிர்க்கலாமென்று அதை ஆதரிக்கும் சிலர் நினைக்கிறூர்கள். இதுபோன்றஒரு விஷயத்தைச் சாதிக்கோணத்திலிருந்து பார்ப்பது நாங்கள் ஒரு முழு ஜனநாயக சமூகம் என்பதை மறுப்பதாகும். மாவட்ட சபைகள் ஏற்பட்டால் சமஷ்டி ஆட்சி ஏற்படும் என்று எண்ணுவது தவறு. இவை, பிரிட்டனிலுள்ள தொகுதி சபைகள்போல, ஜனநாயக ஒற்றையாட்சியில் ஓர் அவசியமான நிர்வாகப் பிரிவுகள். ஆனல் தாய்நாட்டை ஒரு முழு சமூகமென்று கருதாமல சாதி, சமயத்தைப்பற்றி பேசுபவர் பலர் இருந்தால் ஒற்றையாட்சி தன்னும் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கமுடியாது. ஒரு குறிப்பிட்ட சாதி தனது பெரும்பான்மை பலத்தைப் பிரயோகிக்கவிரும்புவது இலங்கையைப் போன்றதொரு நாட்டில் மிகவும் ஆபத்து நிறைந்ததாகும். ஏனென்றுல் அங்குள்ளவர்கள் விடுதலை பெறுமுன்பே வாக்குரிமை பெற்றவர்கள். மனித சௌரவத்திலும் சமத்துவத்திலும் இன்னும் பூரண நம்பிக்கையடையாதவர்கள்.

வேறு நாடுகளில் அதிகாரம் பரவலாக்கப்படுவதை நோக்கினுல் இதுபற்றிய வாக்குவாதத்தின் தரம் உயரும். சுயாட்சிபுரியும் கிராம சமுதாயமே சிறந்த அரசியல் மார்க்கம் என்பதை இந்தியாவிலும் இலங்கையிலும் முன்னேர் கண்டுபிடித்தார்கள். அதுவே இந்தியாவின் ஆட்சிமுறைக்கு அஸ்திவாரமாயிருக்க வேண்டுமென்று காந்தியும் வினேபாவும் ஜவஹர்லாலும் ஜெயப்பிரகாசும் வற்புறுத்தியுள்ளார்கள். தெரிவுசெய்யப்பட்டபஞ்சாயத்துத்தலைவர்களைக்கொண்ட சமிதிகளும், சமிதிகளின் தலைவர்களடங்கிய சிலபரிஷத்துகளும் இப்பொழுது மாவட்டம் வரையில் தொழில்படுகின்றன. பிரதேசசபைகளே தேசிய நாடாளுமன்றத்தை தெரிவுசெய்யும். எம். பிக்கள் அவற்றில் இருப்பதை விட்டு அவையே எம். பிக்களை தெரிவுசெய்யும். காந்தியின் அரசியல்முறை ஜனநாயகத்தின் உண்மைத்தத்துவத்துடன் ஒத்துப்போகிறது. "20 பேர மத்தியில் உட்கார்ந்துகொண்டால்மட்டும ஜனநாயகம் தொழிற்படாது" என்றுர் காந்திஜி. அரசின் அதிகாரத்துக்குப் பதில் மக்கள் அதிகாரம், ராஜ சக்திக்கு பதில் ஜன சக்தி ஏற்படவேண்டும். இதைத்தான் 'சமுதாய விஸ்தரிப்பில் தான் தேசிய வாழ்க்கைசிறப்புறும், அரசாங்கத்தின் விஸ்தரிப்பிலல்ல' என்று ஹரொல்ட் வாஸ்கியும் கூறுகிறூர். அதிகாரம் பரவலாக்கப்பட வண்டுமென்பதையே அவர் ஆதரித்தார். ஒரு சிறந்த ஜனநாயகத்தில் ஆலோசனைகளும் தீர்மானங்களும் கீழிருந்து மேலே போகவேண்டும். பொருளாதார, கலாச்சார அபிவிருத்தியும் கீழிருந்து வளரவேண்டும்.

குடியேற்ற நாட்டு முறையை கொழும்பில் வைத்துக்கொண்டு அதிகாரம் கைப்பற்ற முயலுபவர்களிடம் நாட்டுமக்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இப்போட்டாபோட்டிக்கு உதவியாக சாதிப்பிரச்னை உபயோகப்படுகிறது. அரசியல் அதிகாரம் தலைநகரத்தில் குவிந்திருப்பது நல்லதல்ல சகலவித தவல்கருவிகளும் அங்குதான் உள்ளன. நாட்டுத் தலைவர்கள் கிராமங்களிலும், சிறு நகரங்களிலும், பிராந்தியங்களிலும் அதிகாரம் வழங்கி ஒரு சமுதாயப் புரட்சியை உண்டு பண்ணவேண்டும்.

— கே. நேசையா —

### மாவட்டசபைக்கு மாற்றுத்திட்டம்

கொழும்பு, வியா.

மாவட்டசபை நிறுவும் யோசனையைக் கைவிடும்படி, வண. பன்னசிசமகா நாயக்க தேரோ, பிரதமர் டட்லி சேனநாயகாவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மகாநாயக்கதேரோ பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரில், உதத்தேச மாவட்ட சபைக்கு ஒரு மாற்றுத் திட்டத்தையும தெரிவித்துள்ளார், கச்சேரியின்பெயரை, மாவட்டசபை காரியாலயமென்றும், அரசாங்க அதிபரை, மாவட்டசபைத் தலைவரென அழைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது: உத்தேச மாவட்டசபையில் கூறப்பட்டுள்ளதாவது! மாவட்ட சபை அங்கத்தவர்கள்; ஒரு ஆலோசனைசபையாக இருந்து, மாவட்டசபை தலைவருக்கு ஆலோசனைகள்வழங்கலாம். இந்த மாற்றுத் திட்டத்தை 95 சதவீத மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

## 'தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்'

### உப-சபாநாயகருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பருத்தித்துறை எம். பி.

உடுப்பிட்டி, வியாழன்

"தமிழினத்திடையே பிளவுகளை ஏற்படுத்த தீயசக்திகள் முயல்கின்றன. ஆதலால் தமிழ் மக்களின் இரு கட்சிகளான தமிழரசுக் கட்சியும், தமிழ்காங்கிரசும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். எதிர் காலத்தில் தமிழ் மக்கள் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

உபசபாநாயகரான திரு' எம். சிவசிதம்பரத்திற்கு கரவெட்டியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பருத்தித்துறை எம். பி. திரு. கோ. துரைரத்தினம் மேற்கண்டவாறு கூறினுர்.

வடமராட்சித் தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. ரி. அந்தோனிப்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் திரு. எம். சிவசிதம்பரம் கூறியதாவது:--

பின்தங்கிய பகுதிகளின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியம். அதே சமயம் இதர பகுதிகளின் கல்விக் குறைபாடுகளையும் மறந்துவிடக்கூடாது.

பெருமையற்ற வாழ்வும் நல்ல பண்புகளும், நேர்மையுமே ஒருவனை உயர்த்தும் அம்சங்கள். சமூகத்தில் மதிப்புடன் வாழ்வதுதான் பெரும் அதிர்ஷ்டமாகும்.

### ஒய்வுபெறும் ஆசிரியை

ஊர்காவற்றுறை, வியா.

நாரந்தனை கணேசவித்தியாசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி செல்லமுத்து மாணிக்கம் நாற்பது வருட சேவையின் பின் ஒய்வுபெற்றுள்ளார்.

### இன்றைய பலன்

[14 - 6 - 68]

ஆனி மீ 1 உ

வெள்ளிக்கிழமை

திதி- சதுர்த்தி இரவு 6-32 மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- திருவோணம்.

ராகுகாலம் - 10-23 — 11-53

சுபநேரம் - 5-53— 7-23

இன்று பிறந்தவர்களுக்கு— பொன்னுன சந்தர்ப்பங்கள் தாராளமாகக்கிடைக்கும். நீண்ட நாள் பகை நீங்கும். வீட்டில் சுபகருமம் நடைபெறுவதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவரின் உதவி உங்களுக்குக்குத் தாராளமாகக் கிடைக்கும். பெண்கள் தங்கள் நடவடிக்கையில் மிகவும் கவனம் செலுத்தவும். மாணவர்களுக்கு கல்விநலனும் புதிய உற்சாகமும் உண்டு.

மேஷம்- நல்ல திருப்பம், பெரியோர் மதிப்பு.

ரிஷபம்- இதயத்தாகம், இணைப்பு இறுகும்.

மிதுனம்- உறவினர் சந்திப்பு, பிரயாணம்

கடகம்- விழியாலே மொழிபேசி விளையாட நன்று.

சிம்மம்- குறை கேட்க நேரிடும், சிந்தித்துச் செயலாற்று

கன்னி- கவலை வேண்டாம் கைகொடுத்துதவ முதியவர் வருவார்.

துலாம்- செய்தொழில் மகிழ்ச்சி, மேலிடத்துச் செல்வாக்கு.

விருச்சிகம்- புரட்சி மனப்பான்மை, புத்திரர் புகழ்.

தனுசு- கவலையின் நிழல், கடவுள் நம்பிக்கை

மகரம்- மின்னுவதெல்லாம் பொன்னல்ல, நிதானம் நன்று.

கும்பம்- இல்லற மகிழ்ச்சி, இனியவை நடக்கும்.

மீனம்- தூக்கம் கெடும் துன்பம் அணுகும்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

இன்று...

## தமிழ்ப்... க...

— தென்புலோலி...

தமிழ் இலக்கண இயங்களைத் தாமே... உணர்ந்து அவற்றைப்... ருக்கும் கற்பித்துப் ப... வர்களையும் அறிஞர்க... உருவாக்கினுர் க... சேகனுர்.

தென்புலோலி... பிறந்த இவர், வர... புறம் வாட்டவும் இ... கால் கைகளை வழங்... செய்து மறுபுறம்... வும் நிலைகலங்காத... மொழியையே தம... மூச்சாகக் கொண்டு... தார்.

இவரிடம் இருந்த... ந்த அறிவும் உயர்ந்... பும் மிகுந்த நா... இவர் கூறுவனவற்... ஏற்றுக்கொள்ளச் செ... வும் அல்லாமல்... புகழையும் தேடிக்... தன.

தோற்றப் பொலி... இரேக்கப் பேரறி... சாக்கிரட்டீசைப்... காட்சியளித்த இ... டல் குழவிகள் முதல்... வர்கள் ... வரை ... வகையில் ஒரு பே... அமைந்திருந்தது.

அன்பாலும், பண்ப... நாகரிகத்தாலும்... பண்பாட்டையே எ... குறைவின்றிப் பின்... இவர் தமிழின் பெரு... —தமிழன் சிறப்பை... மெல்லாம் அறியச்... வேண்டும் என்ற... நோக்கோடு ... உழைத்தார். இலக்... இலக்கியம், என்... தருக்கம் முதலிய... வல்லுநரான இவர்... றைப் பிறருக்குக் க...

புத்தூர் கொலை

## சந்தே... அடையாள...

யாழ்ப்பாணம், ... புத்தூர் கொலை ச... மாக கைது செய்ய... நால்வரில் மூவர் அ... அணிவகுப்பின்போது... யாளம் காட்டப்பட்...

யாழ்ப்பாணம் ம... ரேட் நீதிமன்றத்தி... காலிக மாஜிஸ்திரேட்... அல்பிரெட் துரை... ஜே.பி.யூ.எம். முன்... இந்த அடையாள... வகுப்பு நேற்று ந... றது. கடந்த மாதம்...

கோவில் வேள்வி...

## இ. போ. ... குத்தி... வல்வெட்டி...

யாழ்ப்பாணம், ... கோவில் வேள்வி... தியால் குத்தப்பட்... போ ச. பஸ் இ... டர் ஒருவர் மரண... இது சம்பந்தமாக இ... ச வில் இளைரா... மையாற்றும் ... என்பவர் கைது ... பட்டு றிமாண்டில் ... பட்டுள்ளார்.

வல்வெட்டித் து... பொலிஸ் பகுதி... அம்மன் கோவில்... நடைபெற்ற இச்... தில் ஜீவரத்தினம்... வரே கொலை செய்ய... வராவார். ... வெடி கொளுத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நினைவுதினம்

# ...மிழ்ப்பேரறிஞர் கந்தமுருகேசனர்

...ன்புலோலி பண்டிதர் வீ. பரந்தாமன் —

...ழ் இலக்கண இலக் ...ளைத் தாமே கற் ...த்து அவற்றைப் பிற ... கற்பித்துப் பல புல ...யும் அறிஞர்களையும் ...க்கினர் கந்தமுரு ...ர்.

...ன் புலோலியிலே ... இவர், வறுமை ஒரு ...வாட்டவும் இயற்கை ...களை வழங்காமல் ... மறுபுறம் வருத்த ...கலங்காத தமிழ் ...மையே தம் உயிர் ...கக் கொண்டு வாழ்ந்

...டம் இருந்த தெளி ...றிவும் உயர்ந்த பண் ... மிகுந்த நாநலமும். ...கூறுவனவற்றை பலர் ...கொள்ளச் செய்தன ... அல்லாமல் பெரும் ...யும் தேடிக்கொடுத்

...ற்றப் பொலிவிலே ...கப் பேரறிஞனை ...ரட்டைசப் போலக் ...யளித்த இவரிடத் ...ழிகள் முதல் கிழ ...ரை ...படும் ...ல் ஒரு பேராற்றல் ...ந்திருந்தது.

...பாலும், பண்பாலும், ...த்தாலும் தமிழ்ப் ...ட்டையே என்னவும் ...வின்றிப் பின்பற்றிய ...தமிழின் பெருமையை ...ழன் சிறப்பை உலக ...லாம் அறியச்செய்ய ...டும் என்ற உயர் ...கோடு அயராது ...த்தார். இலக்கணம், ...யம், எண்கணிதம் ...ம் முதலியவற்றில் ...நரான இவர் அவற் ... பிறருக்குக் கற்பித்த

லினால் தமது வாழ்க்கைக்கு வழிவகுத்துக்கொண்டார்.

மணிமேகலையில் கூறப்படும் "மணிபல்லவம்" வல்லிபுரக்கோவில் இருக்கும் இடமே என்ற ஆராய்ச்சிக் கருத்தையும், தொல்காப்பியர் இலங்கையிலோ அல்லது இலங்கையைச் சார்ந்து கடலால் கொள்ளப்பட்ட ஒரு நாட்டிலோ தான் வாழ்ந்திருக்கவேண்டும் என்ற கருத்தையும் வேறு பிற சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்களையும் முதன் முதலில் ஆதாரங்களோடு கூறியவர் கந்தமுருகேசனரே ஆவர். மேலும் 'நல்லை நாவலன் கோவை', 'திருப்பனை அந்தாதி' முதலிய நூல்களையும் ஏராளமான தனிப் பாடல்களையும் இயற்றினர். இவை இன்னும் அச்சேறாமல் இருப்பது தமிழரின் தவக்குறைவு போலும்.

"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை
நன்று"— என்ற

வள்ளுவன் வாக்குக்கு இலக்கியமாக — மனித இனத்துக்குப் பொதுவாகவாழ்ந்த ஈழத்துப் பகுத்தறிவுச் சிந்தனையாளரான இந்த மாமேதை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து ஐந்தாம் ஆண்டு ஜூன் திங்கள் பதினன்காம்நாள் மறைந்தார்!

இனி அவர்விட்ட ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து ஆராய்வதும், அவர் சொன்ன புதிய சிந்தனைத் துளிகளை உலகமெங்கும் பரப்புவதும் ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

## "மனைவியை காணோம்" — ஒரு கணவர்
## "கணவனைக் காணோம்" — ஒரு மனைவி

நல்லூர், வியாழன்

கணவனைக் காணவில்லை யென ஒரு மனைவியும் மனைவியைக் காணவில்லையென ஒரு கணவனும் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் புகார்கள் தெரிவித்துள்ளனர்.

திருமதி மரகதம் குணரத்தினம் என்பவர் புங்குடுதீவு கிராமசபையில் கடமையாற்றும் தமது கணவரான குணரத்தினம் என்பவர் வேறொரு திருமணமான பெண்ணுடன் தம்மை விட்டுச் சென்று விட்டதாகவும் இப்பெண்ணுக்கு மூன்று குழந்தைகள் இருப்பதாகவும் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இதே சமயத்தில் மனைவியை இழந்த கணவரான ஆசீர்வாதம் தமது மனைவியையும் தமது மூன்று பிள்ளைகளையும் குணரத்தினம் என்பவர் (மரகதத்தின் கணவர்) ஏமாற்றிக் கடத்திச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நபரான குணரத்தினம் தாம் கடத்திச் சென்ற பெண்ணுடன் சங்கானையில் தற்போது வசித்து வருவதாகப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சங்கானைப் பொலிசார் குணரத்தினத்தையும் குறிப்பிட்ட பெண்ணையும் குழந்தைகளையும் தேடிவருகின்றனர்.

---

## 'நன்மை கிடையாது'

உடுப்பிட்டி, வியாழன்

"மாவட்டசபை மசோதா பயனற்றது. தமிழினத்திற்கு அதனுல் ஒரு போதும் நன்மை ஏற்படமாட்டாது. மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுமாயின் எனது உப சபாநாயகர் பதவியைத் துறந்து விடுவது நிச்சயம்.'

உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

---

## கம்யூ. கட்சி ஆண்டுவிழா

கொழும்பு, வியாழன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் [ரஷிய சார்பு] 25 வது வருடாந்தவிழா ஜூலை 3ந்தேதி முதல் ஒரு வருடம் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ் விழாவையொட்டி புதிய நகரமண்டபத்தில் ஜூலை 3ந் தேதி பொதுக் கூட்டம் நடைபெறும். மாகாணங்கள் தோறும் பொதுக் கூட்டங்களும் நடைபெறும்.

## அமெரிக்காவின் இழப்பு

உடுப்பிட்டி, வியா.

'செல்வமும் விஞ்ஞானமும் முன்னேறியுள்ள உலக ஜனநாயக நாடுகளில்ஒன்றுதான் அமெரிக்கா ஆனல் அங்குதான் கொலைவெறியும் பாதகச் செயல்களும் நிறைந்து காணப்படுகின்றன. அந்த நாட்டிலே ஒளி விளக்கேற்றிக் கொண்டிருந்த கெனடியும் மாட்டின் லூதர்கிங்கும் மறைந்தபின் மற்றுமொரு கெனடியும் மறைந்துவிட்டார்.

செனட்டர் றுெபேட் கெனடியின் மறைவினுல் அமெரிக்கா எதிர்காலத்தில் சிறந்ததொரு ஜனதிபதியை இழந்துவிட்டது.'

இவ்வாறு தென்கருணை ஆதவன் இளைஞர் மன்றத்தின் கென்னடி மறைவு அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் மன்றச் செயலாளர் திரு செ. பாலசுப்பிரமணியம் கூறினர்.

உடுப்பிட்டி கி. ச. 2-ம் வட்டார உறுப்பினர் திரு. பி. கே. குலசிங்கம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

மற்றும் திருவாளர்கள் இரத்தினசபாபதி சி. தியாகேஸ்வரன் வீ. மகாலிங்கம் ஜே. உதயகுமார், சி. மகாலிங்கம், கே. ஆனந்தராசா ஆகியோரும் பேசினர்.

---

## தொகுதி தோறும் விற்பனை இலாகா கிளைகள்

### தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியின் ஒவ்வொரு தொகுதியிலும் விற்பனை இலாகாக் கடைகளை அமைக்குமாறு உணவு அமைச்சரைக் கோருவதென்ற தீர்மானம் அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தினதும் தேசிய அரசாங்க தொழிற்சங்க சம்மேளனத்தினதும் கூட்டு சம்மேளன பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சீமெந்துக் கூட்டுஸ்தாபன காங்கிறீற் இலாகாவை அரசாங்கம் நட்டமென்று கூறிமூட எண்ணியுள்ளதால் சுமார் 300 நிரந்தர ஊழியர்கள் வேலையிழக்கவேண்டியுள்ளதால், இந்த இலாகாவை மூடாமல் 'ஸ்பெஸ்டஸ்' ஒரு தயாரிக்கும் இலாகாவாக மாற்றவேண்டும்.

சீமெந்துக் கூட்டுஸ்தாபன தொழிலாளர் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரல் வேண்டும்.

இந்நாட்டிலே மாவட்ட சபை மசோதா பிளவுபடுத்தி அமைதியின்மையையும், வகுப்புக் கலவரத்தையும் தூண்டக்கூடியதாக இருப்பதால் மாவட்டசபை மசோதாவை வன்மையாக எதிர்ப்பதுடன் அதனை நிராகரிக்குமாறு பிரதமரைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கா. நி.)

# ஜயபாரன் எழுதுவது

ஜெயபிரகாஷ் நாராயணனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ? நானும் இதுவரை கண்டதில்லை. மகாத்மா காந்தி, ஆசாரிய வினேபா பாவே இவர்களது பூரண நம்பிக்கையையும், ஆசியையும் பெற்ற இத்தலைவரை நேரில் காண்பதற்காக நேற்று முன்தினம் ரத்மலானை விமான நிலையத்துக்கு ஆவலுடன் சென்றேன்.

காந்தி சேவா சங்கம், சர்வோதய சங்கம், இந்தியா-இலங்கை நட்புச் சங்கம் இவற்றைச் சேர்ந்த தலைவர்களும், பல எம். பி. மார்களும், பிரமுகர்களும், சமயம், கட்சி முதலிய வேற்றுமையின்றி அங்கு அவரை வரவேற்க ஏராளமாகக் கூட்டியிருந்தார்கள்.

விமானம் வந்து இறங்கிய சில நிமிடங்களில் ஜெயபிரகாசலரயும் சர்வோதய காரியதரிசி ராதா கிருஷ்ணவையும் கஸ்டம்ஸ் முதலிய சோதனைகளின்றி நேரே பிரமுகர்கள் வரவேற்பு அறைக்கு இலங்கை அன்பர்கள் அழைத்துவந்தனர். காந்தி சேவா சங்கத்தினர் கதர் நூல் மாலை அணிவித்தனர். சர்வோதய சங்கத்தார் மலர் மாலை சூட்டி வரவேற்றனர். சர்வோதய முத்தோர் சபை சார்பாக, வெற்றிலை அளித்து சிங்கள தேசிய சம்பிரதாயப்படி அன்பைத்தெரிவித்து வரவேற்றார்கள்.

ஃ ஃ ஃ

கண்டதுமே, யார் இந்தப் பெரிய மனிதர் என்று கேட்கக்கூடியதாக இருக்கிறது. ஜெயபிரகாசரின் கம்பீர மான தோற்றம். ஆஜானபாகு. முழங்காலுக்கும் கீழ்வரை தொங்கும் நீண்ட, பெரிய, தூய கதர்ஜிப்பா, இடுப்பிலே பஞ்ச கச்சம் வைத்துக்கட்டிய தூய கதர் வேட்டி. காலில் செருப்பு.

அங்கிருந்தவர் எல்லாரையும் விட உயரம். சாந்த ஸ்வரூபி. மென்மையான குரல். வாலிப வயதிலே புரட்சி வீரராகத் திகழ்ந்து, வெள்ளைக்காரர்களுக்குப் பெரும் திகிலவித்தவர்தான் இவர் என்று நம்பமுடியவில்லை, புரட்சி வீரர், அகிம்சா தயாகவீரராகி விட்டார். மக்கள் சேவைக்காகத் தம் ஆவி, உடல், உடைமையெல்லாம் ஜீவன் தானமாகக்கொடுத்த 66 வயதாகிய இத்தலைவரைப் பார்த்தாலே, அவருடன் பேசினாலே, அச்சம், கவலை, சந்தேகம் எல்லாம் பறந்தோடி, நம்பிக்கையும், தைரியமும், சந்துஷ்டியும் ஏற்படுவதாக இருக்கிறது.

தலைமை வகித்து நடத்துவதற்குப் பிறந்த "இயற்கைத்தலைவர்" சிலர் என்பது யாருக்கும் விளங்கும்.

பல புத்தபிக்குகள் அமர்ந்து மங்கள ஆசிர்வசனங்களைக் கூறிய போது, தம்கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி தமதுநன்றி வணக்கத்தைத் தெரிவித்தார். பின்னர் பத்திரிகை நிருபர்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் அவர் அளித்த பதில் எதிர்காலம் பற்றி நம்பிக்கையூட்டுவதாக இருந்தது.

ஃ ஃ ஃ

ஆசாரிய வினேபா பாவே இலங்கைக்கு வருவாரா? என்று கேட்டதற்கு, அவருக்கு அங்கு அதிகவேலை இருப்பதாயும், இக்கேள்விக்குத் தம்மால் திட்டவட்டமான பதில்கூறமுடியவில்லை என்றும், அவரை அழைத்தால், அவருக்கு அவகாசமிருந்தால் வரக்கூடுமென்றும் சொன்னர். சர்வோதயத்தைப்பற்றிக் கேட்டதற்கு, வருகிற ஜனவரி மாதம் இங்கு சர்வோதய மகாநாட்டுக்குவருவதாயும், அப்போது அதுபற்றி விவரமாகக் கூறலாமென்றும், யாழ்ப்பாணத்துக்கும் அச்சமயம் வரலாமென்றும் தெரிவித்தார்.

"குலேக்கர்" என்ற சர்வதேச இயக்க மகாநாடு இம்முறை இலங்கை நுவரேலியாவில் நடக்கிறது. உலக மக்கள் சமுதாயத்திலுள்ள குறைகளை சமாதான முறையில் தீர்ப்பது பற்றி அறிஞர்கள் பலருங்கூடி கலந்து யோசித்து, கூடுமான நடவடிக்கை எடுப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாம். இன்று முதல் 16-ந் திகதி வரை நுவரேலியாவில் இருந்துவிட்டு மறுநாள் இந்தியா திரும்புவாரென்று தெரிகிறது.

ஃ ஃ ஃ

தமது மந்திரி சபையில் சேருமாறு நேருஜி அழைத்தபோதுஇவர்மறுத்துவிட்டார் அப்போது சேர்ந்திருந்தால், இப்போது இவரே இந்தியாவின் பிரதமராகவும் இருந்திருக்கலாம் அவர் மறுத்த காரணம் என்ன தெரியுமா? கட்சி அடிப்படையில் தேர்தல் நடத்தி, எதிர்ப்புகளையும், போட்டிகளையும் வளர்த்து, நாட்டு மக்களிடையே பிளவுகளையும் வேற்றுமைகளையும் வளர்க்கக்கூடிய இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் இவருக்கு நம்பிக்கை இல்லை. பிரதமரும் அவரது மந்திரிகளும் எல்லா மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமென்பதே இவரது கருத்து.

ஜனநாயகமெனப்படும் இந்த அரசியல் திட்டப்படி, அமெரிக்காவில் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனதிபதியை சுட்டுக்கொன்றுவிட்டனர். தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று வந்த ஒருவரையும்கொன்று தள்ளினர். தலைவர், பிரதமர் முதலிய பதவி வகிப்பவர்களின் உயிருக்கே நிச்சயமில்லை. இலங்கையிலும் கூட ஒரு பிரதமரைக் கொன்றுவிட்டனர்!

பொதுமக்களுக்குத் தொண்டு செய்வதற்காக முன்வரும் பிரமுகர்களுக்கு இதுதானா பரிசு? பெரும்பான்மையோரின் ஆதரவைப்பெற்று, அவர்களது நன்மைக்காகவே நடக்கும் இந்த அரசியலின் கீழ், சிறுபான்மையினர் எப்படி நீதி நியாயம்பெற்று சரிநிகர் சமானமாக வாழமுடியும்? இந்தப் பெருங் குறையை அமெரிக்காவுக்விட்டு பல 'ஜனநாயக' நாடுகளும் உணர ஆரம்பித்து விட்டன. இதற்குப்பதிலாக கிராமங்கள் தங்கள் பிரதிநிதிகளை [கட்சி முறையின்]

(8-ம் பக்கம் பார்க்க)

...ர் கொலை

## சந்தேக நபர் மூவர் அடையாளம்காட்டப்பட்டனர்

...ாழ்ப்பாணம், வெள்ளி ...தூர் கொலை சம்பந்த ...கைது செய்யப்பட்ட ...ரில் மூவர் அடையாள ...குப்பின்போது அடை ...ம் காட்டப்பட்டனர். ...ழ்ப்பாணம் மாஜிஸ்தி ... நீதிமன்றத்தில் சுற் ... மாஜிஸ்திரேட் திரு ...ரெட் துரையப்பா ...பி.யூ.எம், முன்னிலையில் ... அடையாள அணி ...பு நேற்று நடைபெற் ...கடந்த மாதம் 29-ம் திகதி புத்தூரைச் சேர்ந்த தில்லையர் என்பவரைக் கொலை செய்ததாக சந்தேக நபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கந்தையா இராசதுரை என்பவர் சந்தேக நபர்கள் மூவரை அடையாளம் காட்டினர். கோப்பாய் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு சிறிவர்த்தன சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தார். (கா. நி)

...ில் வேள்வியில்

## போ. ச. இன்ஸ்பெக்டர் குத்திப் படுகொலை

### ...வல்வெட்டித்துறையில் சம்பவம்

...ாழ்ப்பாணம், வெள்ளி ...ாவில் வேள்வியில் கத் ...ல் குத்தப்பட்ட இ. ... ச. பஸ் இன்ஸ்பெக் ... ஒருவர் மரணமானர். ... சம்பந்தமாக இ. போ. ...வில் கிளினராகக் கட ...ாற்றும் சிவலிங்கம் ...வர் கைது செய்யப் ... றிமாண்டில் வைக்கப் ...ள்ளார்.

...ல்வெட்டித்துறைப் ...விஸ் பகுதியிலுள்ள ...மன் கோவில் ஒன்றில் ...பெற்ற இச் சம்பவத் ... ஜீவரத்தினம் என்ப ... கொலை செய்யப்பட்ட ...வர். வேள்வியில் ... கொழுத்துகையில் ஏற்பட்ட சண்டையில் இவரைச் சிவலிங்கம் என்பவர் கத்தியால் வெட்டியதாகவும், இதனுல் படுகாயமடைந்த ஜீவரத்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுமரணமானதாகவும் மரணவிசாரணையின் போதுதெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா ஸ்தல விசாரணை நடத்தினர். இம் மரணம் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபரான சிவலிங்கம் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். [கா. நி]

# 'திருக்குறள் ஆராய்ச்சிக்கழகத்தில் ஈழத்தவரும் பணிபுரிய வேண்டும்"

## உப-சபாநாயகர் யோசனை

உடுப்பிட்டி, வியா

"திருக்குறளை நாம் போற்றத் தவறினுலும் உலகோர் திருக்குறளின் மகிமையை உணர்ந்து விட்டனர். பிற நாட்டவர்கள் எமது மொழியிலுள்ள பக்தியை சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சிமகாநாட்டில் கண்டு கொண்டேன். திருக்குறளைப் படிப்பதற்காகவே செக்கோஸ்லவாக்கிய, பிரான்ஸ், ஜேர்மனி முதலிய மேல் நாட்டு அறிஞர்கள் தமிழைக்கற்றனர்.

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டிஎம். பி யுமான திரு. மு. சிவசிதம்பரம் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 12வது திருவள்ளுவர் நினைவு விழாவின் 2-ம்நாள் நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்,

கரணவாய் உயதமாற்றைந்தோருக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட இராமநாதன் அரங்கில் இவ்விழா நடைபெற்றது.

உபசபாநாயகர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சென்னை அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களிலும் தமிழக அரசினுல் பலகோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள்ஆராய்ச்சிக் கழகத்தில் ஈழத்தவர்களும் பணிபுரிய வேண்டும். திருக்குறளில் ஈழத்தறிஞர்கட்கும் பெரும் பங்குண்டு குறளில் புதிய கருத்துக்களையும் எண்ணங்களையும் புகுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினை ஆக்கும்

## முயன்று முயன்று பாருங்கள்





தேசீய லொத்தர்ச் சீட்டுகளை
இன்றே வாங்கிக் கொள்ளுங்கள்
முயற்சிக்கு அதுதான் முதற்படி!
அடுத்து வரும் சீட்டிழுப்பில்


50 சதம் மட்டும் செலவளித்து-- புத்தம் புதிய காரும் பெருந் தொகையான ரொக்கப்பணமும் பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## அடுத்து வரும் சீட்டிழுப்பில் *

**சீட்டிழுப்பு இல. 199, மதவாச்சியில்**
**20—6—68ல் நடைபெறும்.**



**1வது பரிசு ரூ. 100,000/- அல்லது புத்தம் புதிய டற்சன் 2000 காரும் ரூ. 78,600/- ரொக்கமும் ***



**2வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம் புதிய ஒப்பல் கடெ காரும் ரூ. 19,125/- ரொக்கமு**

**3வது பரிசு ரூ. 10,000/-**

**100 ஆறுதல் பரிசுகள்**

கடந்த இரண்டு கார் சுவீப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் தலா ரூ 1087-80 பரிசாகப் பெற்றனர்.

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்பின் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

## வாரத்துக்குவாரம் நூற்றுக்கணக்கான மக்கள் திடீரெனச் செல்வந்தர் ஆகிவிடுகிறார்கள் 50 சதமே வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தை அளித்துவிடுகிறது!

NLB 4/67 AJNS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீதியை பெறமுடியாமல் அல்லலுறுகின்றனர்"

## வலி. வடக்கு ஆசிரியர் சங்க வருடாந்த அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஆசிரியர்களது இடமாற்றம் இப்போது பெரியதோர் பிரச்சினையாக உருக்கொண்டு விட்டது. திட்டமெதுவும் இன்றி ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதால் பெரும்பான்மையான ஆசிரியர்கள் நீதியைப் பெறமுடியாமல் அல்லலுறுகின்றனர். இந்த விடயத்தை ஆசிரியர் சங்கங்களும், அதிகாரிகளும் புனராலோசனை செய்ய வேண்டும்.''

இன்று நடைபெறும் வலிகாமம் வடக்கு ஆசிரிய சங்க வருடாந்த பொதுக் கூட்ட நிர்வாக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் வலி வடக்கு ஆசிரிய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று மாலை திரு. எஸ். சிவயோகீசர் தலைமையில் நடைபெறும்.

வலி வடக்கு ஆசிரியர் சங்க வருடாந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;—

5-3-68இல் கண்டியில் நடைபெற்ற தேசிய ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்துக்கு எம் சங்கத்தின் பிரதிநிதிகளாக ஒன்பது பேரைத் தெரிவு செய்து அனுப்பினோம். வெளிமாகாண ஆசிரியர்களது அனுபவம், அவர்களது உணர்வு பற்றி எம்மால் அறிந்து கொள்வதற்கு இக் கூட்டம் ஓரளவு உதவியாக இருந்தது.

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் அநுசரணையுடன் எம் சங்கத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில அங்கத்தவர்களோடு சங்கத்திற்கு ஆசிரிய அங்கத்தவர்களைத் திரட்ட முயற்சி செய்த பொழுது நாம் ஓரளவு வெற்றி பெற்றோமென்று தான் கூறவேண்டும். இம்முயற்சியில் அதிகாரி கே. கதிர்காமநாதன் அவர்கள் பெரும் உதவி புரிந்தார். அவர்களுக்கு எமது நன்றி.

**செயலாளர்**

சங்கத்தின் செயலாளர் திரு. ஜி. என். விஜயரெத்தினம் அவர்களது சுகவீனம் காரணமாக உதவிச் செயலாளர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்கள் பதில் செயலாளராகக் கடமையாற்றும்படி நிருவாக சபையால் கேட்டுக் கொள்ளப்பட்டார். திரு. ஜி. என். விஜயரத்தினம் அவர்கள் இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்களை நிருவாகசபை செயலாளராகத் தெரிவு செய்தது.

---

## 'திருக்குறள் ஒரு பூரண நூல்'

உடுவில், வியா.

'நமது உடம்பிற்கு பால் எவ்வாறு ஒரு பூரண உணவாகக் கணிக்கப்படுகின்றதோ அதே போன்று எமது வாழ்க்கைக்குப் பூரண வெற்றியையும், பலத்தையும், வழிமுறையையும் கொடுக்கவல்ல அரிய ஒரு நூல் திருக்குறள்.'

வள்ளுவர் விழா உடுவில் இளைஞர் மன்றத்தில் கொண்டாடப்பட்ட போது மன்றத்தின் செயலாளர் திரு. வி. பரிபூரணானந்தன் மேற்கண்டவாறு கூறினார். திரு. எஸ். நவரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## சாய்ப்புச் சட்டம் மீறப்படுகிறது

கொழும்பு, வியா

நாடு முழுவதும் தொழிற் சந்தோரைச் சேர்ந்த தொழில் அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் சாய்ப்புச்சட்டங்கள் மீறப்படுவதாக ஊழியர்களின் புகார்கள் தெரிவிக்கின்றன. முன்னர் சாய்ப்புச் சட்டத்தை மீறுபவர்கள் மீது தொழில் அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுத்து, வழக்குத்தாக்கல் செய்துவந்ததால், சாய்ப்புச்சட்டம் சரிவர அமுலாக்கப்பட்டுவந்தது.

சமீபத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் சாய்ப்புச் சட்டம் சம்பந்தமான நான்கு வழக்குகளை உதவி தொழில் ஆணையாளர் நடத்தினார். நான்கு வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

---

## ஆசிரியர் இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு எஸ் நடராசா புட்டளை மகா வித்தியாலய அதிபராகப் பதவி யர்வுடன் இம் மாதம் 15-ம் திகதி செல்கிறார்.

புட்டளை மகா வித்தியாலய ஆசிரியர் திரு எஸ். இராசசேகரம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

இராமநாதன் கல்லூரி விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் திரு ஆர். வல்லிபுரம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

---

## பலாப்பழம் யமனாகியது

நல்லூர், வியா,

பலாப்பழம் சாப்பிட்டதினால் மயக்கமடைந்த நிலையில் குப்பிளானைச்சேர்ந்த 17 வயதுடைய கதிரமலைநாதன் என்ற இளைஞராம். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு காலமானார்.

டாக்டர் குலத்துங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார். திரு. இராசநாயகம் மரணவிசாரணை நடாத்தினார்.

---

## குருபூசை

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் இன்று பிற்பகல்சைவ மாணவர் மன்றத்தால் திருஞானசம்பந்தர் குருபூசை நடாத்தப்பட்டது.

பண்டிதர் என். முருகேசு பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

---

## எதிர்ப்புக் கூட்டம்

புன்னாலைக்கட்டுவன் வியாழன்

அடையாள அட்டை மசோதா வடபகுதிக் கரையோரப்பகுதிகளில் பொருட் கட்டுப்பாடு ஆகியவற்றை எதிர்த்து இம்மாதம் 17-ம் திகதி வதிரி அர்ச் அந்தோனியார் ஆலயத்துக்கருகாமையில் வடமராட்சி [illegible] க. கிளை ஒரு மகிரங்கக் கூட்டம் நடாத்தவிருக்கிறது.

வாசகர்களுக்கு ஒரு நல் விருந்து

### தொடர் நவீனம்

17-6-68

'ஈழநாடு'

வாரமலரில் ஆரம்பமாகின்றது

உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வெள்ளி 14-6-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-46 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 திருப்பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 8-00 திருக்குர்-ஆன், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 சித்திரம், 10-15 தேர்ந்த இசை.

---

## பம்பலப்பிட்டியில் வள்ளுவர்விழா

பம்பலப்பிட்டி, வியா.

மத்தியவங்கி தமிழ் இலக்கிய மன்ற சார்பிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஏற்றுமதி இறக்குமதி திணைக்களம் உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம் அரசகரும மொழித் திணைக்களம், மற்றும் திணைக்களங்களின் தமிழ் மன்றங்களின் சார்பில் இம்மாதம் 17-ம் திகதி மாலை 4-30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஷ்வதி மண்டபத்தில் வள்ளுவர் விழா சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

இவ் விழாவுக்குத் திரு. சி. இரங்கநாதன் கியூ. சி. தலைமைதாங்குவார். உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் திரு. சி. சிற்றம்பலம் சிறப்புச் சொற்பொழிவு வாற்றுவார். நாட்டின் பலதுறை தமிழ் அறிஞர்களும் இவ் விழாவில் பங்குபற்றவிருக்கிறார்கள்.

---

## பௌதிக மாணவர் கலக்கம்

புத்தளம், வியா.

புத்தளம் ஸாகிரா மகா வித்தியாலயத்தில் பௌதிகம் பயிலும் மாணவர்கள் அச்சத்திற் குள்ளாகியுள்ளனர். இங்கு பௌதிக இயல் தொடர்ந்தும் கற்பிக்கப்படுமா என்னும் சந்தேகமே இவர்கள் அச்சத்திற்குக் காரணம் இதுவரை பௌதிகம் கற்பித்துவந்த ஒரே ஆசிரியரான திரு. எம். ஜி ஜோசப்புக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. முன்னரும் இருதடவைகள் இவருக்கு இடமாற்ற உத்தரவுகள் [illegible] பட்டன.

# மன்னூர் தேவாலயத்தில் துணிகர திருட்டு

நல்லூர் வியாழன்

மன்னூரிலுள்ள சென் ஜோசப் தேவாலயத்தில் நேற்றுமுன்தினமிரவு சுமார் 2000 ரூபா பெறுமதியான திருச்செமருபங்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக விசாரணை நடத்திய மன்னூர் பொலிசார் இத் தேவாலயத்தை இரவு நேரத்தில் உடைத்தே திருடர் உட்புகுந்து திருடியிருக்கலாமெனத் தெரிவித்துள்ளனர்.

தேவாலயத்தின் ஒரு பகுதி உடைக்கப்பட்டுக் கிடக்கிறது

மன்னூர் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி திரு. கனகசிங்கம் இதுசம்பந்தமாகத் தீவிர புலன் விசாரணை நடத்திவருகிறார். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

---

## கோழிக்களவு விசாரணை

நல்லூர், புதன்

திருநெல்வேலி அரசினர் கிருஷிக பண்ணையில் சில மாதங்களுக்கு முன்னர் களவுபோன 48 கோழிகள் சம்பந்தமாக நிர்வாகத்தினர், சில தொழிலாளர்களை பொலிசாரிடம் ஒப்படைத்தது சம்பந்தமாக விசாரணை நடாத்துமாறு விவசாயப் பண்ணை தொழிலாளர் சங்கம், இலங்கை தேசிய தொழிற்சங்கச் சம்மேளனத்திடம் புகார்செய்ததைத் தொடர்ந்து பாரபட்சமற்ற விசாரணையொன்றை நடாத்துமாறு சம்மேளனம், கிருஷிக உயர் அதிகாரிகளிடம் கேட்டிருந்தது.

இன்று காலையில் நடைபெற்ற விசாரணையில் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திரு. எஸ். ஆர். அருமைநாயகத்திடம் முறைப்பாட்டைக் கொடுக்கலாமேதவிர, விசாரணையில் கலந்து கொள்ள முடியாதென்றும் விசாரணை அதிகாரி தெரிவித்ததைத் தொடர்ந்து திரு. எஸ் ஆர். அருமைநாயகம் வெளிநடப்புச்செய்ததாக தெரிகிறது.

இன்றைய விசாரணை ஒழுங்கு நடவடிக்கைஅல்ல என்றும், சம்மேளனப் பிரதிநிதி கலந்து கொள்ளாவிட்டால் உண்மையான குற்றவாளியைக் கண்டுகொள்ளமுடியாதெனவும் சம்மேளனம் உணவு அமைச்சருக்கு புகார் தெரிவித்துள்ளது.

விவசாயப்பண்ணை உறுப்பினர்களும் விசாரணையில் கலந்துகொள்ளவில்லையென அறியப்படுகிறது.

---

## வீடு தீக்கிரை மன்னூரில்சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மன்னூரில் தேசானை என்ற இடத்தில் சினிமுகமது என்பவரது வீடு எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவரது உடைமைகளும் பணமும் நகைகளும் தீக்கிரையாகின.

நேற்றிரவு நடைபெற்ற இச்சம்பவம் சம்பந்தமாக மன்னூர்பொலிஸைச்சேர்ந்த திரு. ஏ. செல்லையா விசாரணை நடத்திவருகிறார்.

மன்னூரில் சமீபகாலங்களில் அதிகரித்துவரும் வன்முறைச் செயல்களைக் கட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இரவு நேரங்களில் மன்னூர் உதவி பொலிஸ் சுப்ரீண்டன் திரு. செனரத் தலைமையில் ரோந்து சுற்றும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (கா. நி.)

## வட்டுக்கோட்டையில் நலன் புரிச்சங்கம்

வட்டுக்கோட்டை, வியாழன்

வட்டுக்கோட்டையில் விசேஷமாக விவசாயம், கைத்தொழில் முதலியவற்றி அபிவிருத்திக்காகவும் கல்வி, சங்கீதம், சுகாதாரம் கலாச்சாரம் கட்டுறவு இயக்கம், முதலியவற்றின் அபிவிருத்திக்காகவும் ஒரு நலன்புரிச்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்படுமென்றும் அச் சங்கத்தின் ஆதரவில் முதலாவதாக மூளாய்றோட்டில் மாதர் சங்கமொன்றும், ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் போயா தினங்களில் சிறுவர்களுக்கு சமய வகுப்பும பொது அறிவு வகுப்பும் நடத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## 'சமஷ்டிக்கு அத்திபாரம்'

மாவனல்ல, வியா.

மாவட்டசபை மசோதா சமஷ்டிஆட்சிக்கு அத்திபாரம்போடுவதாக முடியும் என்று முன்னாள் உதவிமந்திரி பி ஆர். ரத்னாயக்கா உடுமுனையில் நடந்த கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

அதிகாரங்கள்இல்லாமலே சமஷ்டி கட்சியினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆட்சி நடத்தி தமக்கென முத்திரை அடித்தார்கள். மாவட்டசபை வந்தால் இதிலும் பார்க்ககூடச் செய்வார்கள், ஆதலால் மசோதாவை எதிர்த்து வாக்களிக்கும்படி, மக்கள், எம். பிக்களிடம் கோர வேண்டும்.

---

## நகரசபை எதிர்ப்பு

வத்தளை, வியாழன்

ஹெந்தலை நகரசபை மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக ஏகமனதாக ஒர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இக் கூட்டத்திற்கு திரு. லோறன்ஸ் மடிகல தலைமைவகித்தார்.

---

## 'மக்கள் அச்சம்'

முல்கிரிகல, வியாழன்

'மாவட்டசபை மசோதா மக்கள் மத்தியில் சந்தேகத்தையும், பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது' என்றுவண. ஹின்குவ சிறினிவாசதேரோ இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

சிங்கள இனம் முழுவதும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரும் இம் மசோதாவை எதிர்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

---

## கடல் தொழிலாளர் கஷ்டம்

புத்தளம், வியாழன்

கடந்த பல நாட்களாக இங்கு வீசும் பலத்த காற்றுக் காரணமாக கடல் தொழிலாளர் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர்: கடல் கொந்தளிப்பு காரணமாக இவர்கள் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

பெரும்பாலான தொழிலாளரும் தொழிலுக்குப் போகாததால் இங்கு மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காற்றுக் காரணமாக கோழிநோய் கால் நடைநோய்கள் ஏற்பட்டு கோழிகளும் கால்நடைகளும் மடிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் சபையில் மோதல்

# "19 ஆண்டுகளாக தமிழரசார் துரோகம் செய்துவிட்டார்கள்"

—வவனியா எம். பி

## "தமிழருக்காக இதுவரை காங்கிரசார் சாதித்தது என்ன?"

வட்டுக்கோட்டை எம் பி

கொழும்பு, புதன்
மாவட்ட சபை வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தின்போது இன்று மக்கள் பிரதிநிதிகள்சபையில் தமிழ் காங்கிரஸ் - தமிழரசுக்கட்சி பிரமுகர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் தமிழரசுக்கட்சியினர் கடந்த 19 ஆண்டுகளாக தமிழ்மக்களுக்குத் துரோகம் இழைத்து வந்திருக்கிறார்கள் என்றும் மாவட்ட சபைகள் வெறும் வேலிக்கூத்தாகமுடியும் என்றும் கூறினார்.

தமிழ்காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை சிங்களமக்களுடன் அமைதியாக வாழ்வதையேவிரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம்பேசுகையில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் இதுவரை தமிழ் இனத்துக்காக ஏதாவது உருப்படியாக செய்திருக்கிறார்கள் என்று சொல்லமுடியுமாவென்று கேட்டார்.

மாவட்டசபைகள் அமைக்கப்படுவதற்கு எல்லா கட்சியினருமே ஒருசமயம் ஒப்புக்கொண்டனர் என்று சுட்டிக்காட்டினார்.

தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசியபோது, நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் மாவட்ட சபைகள் அமைக்கப்படுவது உகந்ததல்ல வென்றார்.

## சிறுபான்மைத் தமிழர் ஆராய்வர்

யாழ்ப்பாணம், வியாழன்
மாவட்டசபை வெள்ளை அறிக்கை பற்றி ஆராயச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் பொதுச் சபை இம்மாதம் 17ந் தேதி யாழ்ப்பாணத்தில் கூடுகின்றது.

மாவட்டசபையால் சிறுபான்மைத் தமிழருக்கு நன்மை இடையாதென்றும் பொதுச்சபையில் இம்மசோதாவுக்கு எவ்விதம் எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது பற்றி முடிவுசெய்யப்படுமென்றும், ஐக்கிய முன்னணிச் செயலாளரான திரு. எம். சி. சுப்பிரமணியம் தெரிவித்தார். நநி

## தமிழ் விளங்கவில்லையாம்

பண்டத்தரிப்பு, புதன்
மரவரிக்கு விண்ணப்பம் செய்யும் பத்திரத்தைதமிழ் மொழியில் பூர்த்திசெய்வதால் அது தமக்கு விளங்காதென்றும் ஆங்கிலத்தில் பூர்த்திசெய்யும்படியும் சண்டிலிப்பாய் இலாகாவில் கடமையாற்றும் உத்தியோகத்தர் கேட்கின்றனராம். இதுவரை காலமும் தமிழ் மொழியிலே பத்திரத்தைப் பூர்த்திசெய்துவந்தனர்.

## 6 வட்டாரங்களில் அங்கத்தவர் போட்டியின்றி தெரிவு

### ஒலுமடு கி. ச; தேர்தல்

வவுனியா, புதன்
ஒலுமடு கிராமச்சபையின் 9வட்டாரங்கள் அடங்கிய கிராமச் சபையில் 3வட்டாரங்களுக்குமாகிய தேர்தல் நடைபெற்றன. மிகுதி வட்டாரங்களுக்கும் 6 பேர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

இரண்டாம் வட்டாரத்தில் முன்னைய கிராமச்சபைத் தலைவர் திரு. பி. கந்தசாமிக்கும், திரு. வி. பொன்னையாவுக்கும் சரிசமனாக வாக்குகள் கிடைத்தமையால் திருவுளச்சீட்டுப் போட்ட பொழுது முன்னைய தலைவர் மறுமுறையும் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். மற்றைய இரு வட்டாரங்களிலும் வெற்றி பெற்றவர் விபரம் வருமாறு:—

5-ம் வட்டாரம்:
திரு. எம். தம்பையா.
8-ம் வட்டாரம்
திரு. கே. இராசையா.

போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு:—

1ம் வட்டாரம்
திரு. கே. இராசையா
3-ம் வட்டாரம்
திரு. எம், தம்பிஐயா
4-ம் வட்டாரம்
திரு. எ. வீரசிங்கம்
6-ம் வட்டாரம்
திரு. எஸ், செல்லத்துரை
9-ம் வட்டாரம்
திரு. ஆர். இராமலிங்கம்

## சிறுவனை ஒரு மாதமாக காணவில்லை

நல்லூர், வியாழன்
திருநெல்வேலி கிழக்கு அரசடி வீதியிலுள்ள திருமதி செ. மாணிக்கம் என்பவரது வீட்டிலிருந்து சென்ற ஏப்ரல் 26-ம் திகதி வெளியில் சென்ற முத்துச்சாமி மதியழகன் என்ற சிறுவனை இன்னமும் காணவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது நிறமும் அழகிய தோற்றமுமுள்ள இச் சிறுவன் 4 1/2 அடி வரை உயரமுள்ளவர் எனவும் தெரிகிறது.

## இடமாற்றம்

புத்தளம், வியா.
கடந்த ஒன்றரை மாதகாலமாக கற்பிட்டி வட்டாரக் காரியதிகாரியாகக் கடமையாற்றிவரும் திரு. ஜே. எஸ். குணரத்தினம் இம்மாதம் 15ம் திகதியிலிருந்து திருகோணமலைக்கு இடமாற்றலாகியுள்ளார்.

## வேலணையில கடும் வரட்சி

வேலணை, வியாழன்
வேலணையில் நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக 3-ம், 4-ம், 6-ம், 8-ம், 9-ம் வட்டார மக்களுக்கு இலவசமாக நீர் விநியோகிக்க வேலணை கிராமசபை தீர்மானித்துள்ளது.

படகு சுக்கான் தெறித்து

# நடுக் கடலில் 150 பேர் தத்தளிப்பு

அனலைதீவு, புதன்
நடுக் கடலில் பிரயாணிகள் படகின் சுக்கான் தெறித்ததால் சுமார் 150 பிரயாணிகள் பெரும் அவஸ்தைக்குள்ளானார்கள். எழுவைதீவுக்கு அண்மையில் நேற்று மாலை இச்சம்பவம் நடைபெற்றது. மாலை 4 மணிக்குப் புறப்பட்ட இப்படகிலிருந்த பிரயாணிகள் மறுநாட் காலை 2 மணிக்கே அனலைதீவை அடைந்தனராம்.

எழுவைதீவுக்கு அண்மையில் ஒரு மேட்டில் படகு ஏறியதாலேயே சுக்கான் தெறித்துப் படகு விபத்துக்குள்ளானதாம். மாலை 7 மணியளவில் எழுவைதீவுக் கரையில் நின்ற கட்டுமரம் ஸ்தலத்திற்குச் சென்று பிரயாணிகளைக் கரை சேர்ப்பித்தது. அனலைதீவுக்குக் கட்டுமரம் அனுப்பி அங்கு நின்ற தனிப்பட்டவரின் படகின் உதவியுடன் காலை 2 மணிக்கு பிரயாணிகள் அனலைதீவை அடைந்தனராம்.

தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினருக்குச் சொந்தமான இப்படகை எழுவைதீவுத்துறைமுகத்திற்குச் செல்வதற்குரிய குறிப்பிட்ட பாதையால் செலுத்தாததாலேயே இவ்விதம் ஏற்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். மாலை 7 மணி தொடக்கம் மறுநாட் காலை 2 மணிவரை எழுவைதீவுக் கரையில் வேறு படகை எதிர்பார்த்து நின்ற பெண்களும் சிறு குழந்தைகளும் தவிக்க வேண்டியநிலைமை ஏற்பட்டதாம்.

இப்படியான சம்பவம் ஒன்று ஒரு சில மாதங்களுக்கு முன்னர், ஊர்காவற்றுறைக் கடலில் தனிப்பட்ட ஒருவரின் படகொன்றின் சுக்கான் தெறித்ததால் ஏற்பட்டதாகவும் இன்று வியத்தக்குள்ளான படகு மேட்டில் ஏறியிருந்திராவிட்டால் கடல்படகைஅள்ளிச்சென்று பெரும் சேதம் ஏற்பட்டிருக்கும் எனவும் பிரயாணிகள் தெரிவித்துள்ளனர். சங்கப் பகுதியினர் இப்படியான படகுகளுக்கு 'மந்தாஸ்' கொடுக்கும் சமயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென அனலைதீவு பிரயாணிகள் சங்கம் கோர விருப்பதாகவும் தெரிகின்றது. [நல்லூர் நி]

## கார்விபத்தில் கல்லூரி மாணவன்

நல்லூர், வியாழன்
கல்வியங்காடு மூன்றும் கட்டைபடியிலுள்ள பிரதான வீதியில் நேற்று மதியானம்நிகழ்ந்த கார்விபத்தொன்றில் பாடசாலைமாணவர் ஒருவர் சிக்கிப் படுகாயமுற்றார்.

ஸ்ரீரங்கன் என்ற 7 வயது மாணவன் பாடசாலையிலிருந்து வீடுசென்றுகொண்டிருந்தபோது கோப்பாயிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக வந்த கார் இவரை மோதியதாகத் தெரியவருகிறது.

சிறுவன் உடனே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இவரது நிலை கவலைக்கிடமாயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக காரைச் செலுத்தி வந்ததாகக்கூறப்படும் கதிரவேலு குணரத்தினம் என்பவர் பொலிசாரால் விசாரணைசெய்யப்பட்டார்.

## பௌத்த ஆலோசனைசபை

கொழும்பு, வியாழன்
பௌத்தர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்கு ஒரு பௌத்த ஆலோசனைசபை நிறுவப்படவிருக்கிறது.

## யாருடைய கூப்பன்கள்?

யாழ்ப்பாணம், வியாழன்
வலிவடக்கு தெல்லிப்பழை 'ஈழநாடு' விற்பனையாளர் கந்தோருக்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்ட இரு கூப்பன்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

மட்டக்களப்பு

## ராமகிருஷ்ணமிஷன் வேண்டுகோள்

மட்டக்களப்பு, வியா
மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனால் நடத்தப்பட்டு வரும் அநாதைகள் விடுதிச்சாலைக் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் எந்நேரமும் சரிந்து விழக் கூடிய நிலையிலிருப்பதால் புதிய கட்டடம் அமைத்து இங்கு தஞ்சம் புகுந்துள்ளவர்களுக்கு அபயமளிக்கும் வகையில் நிதி உதவி அளிக்குமாறு மேற்படி ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கான புதிய கட்டடம் கட்ட சுமார் 2லட்சம் ரூபா செலவிடப்படவிருப்பதாகவும் இதில் 75 அநாதைச் சிறுவர்களுக்கு தஞ்சமளிக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி உதவ விரும்புபவர்கள் ராமகிருஷ்ண மிஷன் அநாதைகள் விடுதிச்சாலைக் கட்டடநிதி, மட்டக்களப்பு எனக்குறிப்பிட்டு மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 'வாபஸ்பெறுக'

கம்பஹா, வியா.
மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கையை வாபஸ்பெறும்படி பிரதமரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம்ஒவபொடபெருவ கிராமசபையில் ஏகமனதாக நிறைவேறியது. மாவட்ட சபைமசோதாசிங்களஇனத்தைப் பாதிக்குமென்றும் இப் பிரச்னையில் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்தும்படியும் கிராம சபை தலைவர் திரு. டி. ஈ. விஜயசுந்தரா கூறினார்.

## 'தேசத்தொண்டர் சம்பந்தர்'

உடுவில், வியாழன்
"எந்த ஒரு நாடு அல்லது சமுதாயம் ஏதாவது ஒரு துறையில் வீழ்ச்சி அடைந்துவிட்டதென்றால் அதை நிவிர்த்திசெய்யவும் சீர்படுத்தவும் எங்கிருந்தோ ஒரு தொண்டன் தோன்றத்தான் செய்வான். இந்த ரீதியில் தோன்றியவர்தான் ஞானசம்பந்தர் தாழ்வுற்ற நிலையில் இருந்த தமிழையும் சைவத்தையும் தலைதூக்க வைத்த தொண்டர் அவர்" என உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசையில் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் கூறினார்.

## நான்காவது பிள்ளைக்கு ஜீவனாம்சம்

யாழ்ப்பாணம், வெள்ளி
சங்கானையைச் சேர்ந்த டெய்சி செல்வராணி [வயது 28] என்பவர் தமது கணவர் எஸ். ராஜரத்தினம் என்பவரிடம் தமது நான்காவது பிள்ளைக்கு ஜீவனாம்சம்கோரி தொடர்ந்திருந்த வழக்கு யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப் பட்ட போது நான்காவது பிள்ளை தன்னுடையதில்லையென எதிரி கூறினார். எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்டிரேட் மாதம் மாதம் ரூபா 10 ஜீவனாம்சமாக செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

## ஐயாறன்

[5ம் பக்கத் தொடர்ச்சி]
லாமல்] தெரிவுசெய்து, அப் பிரதிநிதிகள் மாவட்ட சபைபிரதிநிதிகளையும் மாவட்டசபைமண்டலசபைபிரதிநிதிகளையும், பின்னர் மண்டல சபைகள் தலைமை அரசாங்கத்தையும் தெரிவு செய்ய வேண்டுமென்பது ஜெயபிரகாசரின் கருத்து. இந்த ஏற்பாட்டை பரீட்சார்த்தமாகவாவது சில இடங்களில் ஏன் அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது? அது வெற்றிபெற்றால், அமெரிக்காவுக்குக்கூட வழிகாட்டுவதாக ஏன் இருக்கப்படாது? அங்குஜனாதிபதிகள் நிம்மதியாக உயிருக்குக் கவலைப்படாமல், ஆட்சி புரியலாமல்லவா?

ஃ ஃ ஃ

பாவமே புரிந்தகலிடந் தன்னிற்
பலபகர்ந்த லமந்துயிர் வாழ்க்கைக்,
காவ வென்று முந்தயர்ந்து வீழாதே,
அன்னை தன்றி றம் அறிவுற் றருகி,
மாவின் சருவி உடைபுனைந் தானை,
மணியை மைந்தனை வானவர்க்க முதைத்
தேவதேவனைத் திருத்தினை நகருட்,
சிவக் கொழுந்தினைச் சென்றடைமனனே.
—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## லஞ்ச ஊழல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சுப்பிரமணியம், திரு. எஸ். இராசையா, திரு. எஸ். நடேசு, திரு. எம். ஆறுமுகம் ஆகியோரும் அங்கம் வகிப்பர்.

லஞ்ச ஊழல் அதிகரித்து வருவதாகவும் இதை ஒழிப்பதற்கு பொதுமக்களையும் சங்கப் பிரதிநிதிகளையும் கொண்ட கண்காணிப்புச் சபை ஒன்றை மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நியமிக்க வேண்டுமென்றும் தூதுகோஷ்டி அமைச்சரிடம் வற்புறுத்தியிருக்கிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org